# ஞானக் குறள்

## ஔவையார்



தெளிவுரை

ஞானவெட்டியான் - திண்டுக்கல்

# ஞானக் குறள்

## முன்னுரை

***************

## ஓம் சிவயநம

ஔவைப் பிராட்டி அருளிச் செய்த நீதி நூல்கள் பல. ஞான நூல்கள் பல. ஞான நூல்களில் தலை சிறந்து விளங்குவது இந்த “ஞானக் குறள்”. இதில் சூக்குமங்கள் நிறைந்திருப்பதாலும், அவைகளை நடைமுறை அனுபவத்தில் உணராததாலும் இந் நூலுக்கு விரிவாக உரை எழுத யாரும் முன் வரவில்லை.

50 ஆண்டுகள் செய்த தவப் பயனாலும், என் ஞானாசிரியன் திரு.த.பொன்ராமன் அவர்கள் தந்த ஊக்கத்தாலும் உரையெழுதத் துணிந்தேன்.

இந்திய நாட்டில் வாழும் மக்கள் இறைவனை அடைய, நூல்கள் பேரறிவாளர்களின் பட்டறிவினால்(experience) எழுதப்பட்டன. நூல்கள் எழுதுவதற்கு முன்பே, ஞான மார்க்கத்தின் இரகசியங்களை வாயினால் ஒருவருக்கு ஒருவர் சொல்லி வந்தார்கள். பின்பு பீசங்களை ஏற்படுத்திய பிறகு, ஓலையில் அந்த எழுத்துக்களைக் கொண்டு தாங்கள் அனுபவித்த மகத்தான இரகசியப் பொருளைப் போதிக்க வேண்டியவர்களைத் தேர்ந்தெடுத்து, சீவர்களிடத்தில் வைத்திருந்த கருணையினாலேயே உபதேசித்து வந்தார்கள். அவ்விதமாக வெளிப்பட்ட நூலே வேதமாகும்.

இதுவே முதல் நூலாக விளங்குகிறது. இவ்வேதத்தை அறிந்து அநுபவித்த ஞானிகளும் பெரியோர்களும் இதன் மூலமாகக் கிடைத்த அனுபவத்தினால் சார்பு நூல்களை இயற்றினார்கள். வேதசாரம் ஞானிகளால் ஆறு உப அங்கங்களாகப் பிரிக்கப்பட்டன. அவைகளில், முதலாவதாகிய சிட்சை என்னும் அங்கத்தைத் தழுவியே வேதங்கள் அனுசரிக்கப்பட்டு வந்தன.

கடவுளைக் காண வழி இரண்டு என வகுத்தனர். அவை சுரம், சரமென உணர்த்தினார்கள். அவைகளை நாதத்தின் மூலமாகவும், பிராண அபான வாயுக்களின் மூலமாகவுமே அடைய முடியுமென்று உணர்த்திப் பாக்களைப் பாடி வைத்தார்கள்.

அது போலவே, ஓங்கார சொரூபமாகிய நம் நாட்டின் (இந்தியாவின் மேல் ஓம்மைப் பொருத்திப் பார்க்கவும்) வடபுலத்தில் வசித்துவந்த ஞானிகளால் சத்தி அம்சமாகிய செங்கிருதமென்னும் மொழியானது ஆலய வழிபாடு, வேள்வி செய்தல், முன்னோருக்கு ஆண்டுக்கு ஆண்டு செய்யவேண்டிய சடங்குகள், திருமணம் ஆகியவைகளுக்கு

(பரவித்தைக்கு) மட்டும் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் அந்த மொழி பேசுவதற்குப் பயன்படவில்லை என்பதால், அம்மொழியினின்றும் இந்தி, மராட்டி, குசராத்தி முதலிய வடபுலத்து மொழிகளை உண்டாக்கிக் கொண்டனர். ஞான வினையாகிய ஆத்ம வித்தைக்குச் செங்கிருதத்தையே தாய் மொழியாக்கிக் கொண்டார்கள். இப்படியிருக்க, தென்புலத்தில், சிவமொழியான தமிழ் ஓங்கார பீசமாகத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது. அதில் அனேக பேரறிவாளர்கள் தோன்றி உலகுக்குத் தாங்கள் அநுபவித்த ஆநந்தமாகிய இரகசியத்தை வழிநூலாக்கி வழங்கினார்கள்.

தமிழை ஆதாரமாகக் கொண்டு பீசத்தைத் தமிழிலிருந்தும் ஒலியை செங்கிருதத்திலிருந்தும் எடுத்துக்கொண்டு ஒன்றாய்க் கூட்டிக் கிரந்தம் என்னும் மொழியை உண்டாக்கினார்கள். தமிழையே ஆதாரமாகக் கொண்டு தங்கள் அநுபவங்களை வெளிப்படுத்தி இருக்கும் ஞானிகளின் போக்குகளை, நாம் அநுபவித்துத்தான் உணரமுடியும். அது தவிற, அநுபவமில்லாமல் சாத்திரங்களைப் படித்து மட்டுமே முடிவுக்கு வருவது நன்றன்று. அதனால், ஞானிகளின் போக்குகளைச் சிதைத்து விடுவதினால் ஏற்பட்ட குற்றத்தையும், கற்றவர்கள் வார்த்தையே எதிர்பார்க்கும் மற்றவர்கள் கதியினாலேற்படும் (மூச்சோட்டம்) குற்றத்தையும் அடைவர்.

வேதாந்த ஆய்வு என்பதைச் சாற்றிற(சாத்திர) ஆய்வோடு நிறுத்திக் கொள்ளுகிறார்களே தவிர தம் பிறப்பைப் பற்றியும், ஐம்பூதங்களை மானுட உடலில் இணைத்திருக்கும் மருமங்களையும், நாதபிந்து கலைகளின் இரகசியங்களையும், இன்னும் மற்றவைகளையும் ஆராயாமல் விட்டுவிடுகின்றனர். சாற்றிறங்களைப் படித்து அறிவதை விட தன்னை அறியவேண்டி ஆராய்ச்சியின் வழியிலே சென்றால்தான் சூக்கும தத்துவங்களை அறியமுடியும். கண்ணலே பார்த்து, அதன்பின் அநுபவத்திற்குக் கொண்டு வந்து உணர்வது முடியாத ஒன்று.

*"சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே*
*வேர்த்து இரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ ?*
*மாத்திரைப் போதும்முளே மறித்து தொக்க வல்லிரேல்*
*சாத்திரப்பை நோய்கள் ஏது ? சத்தி முத்தி சித்தியே !"*

மரண சமயத்தில் சாற்றிறங்கள் உதவாது. வாய் குழறும். நாவு இழுக்கும்.

கல்வி என்னென்ன? எதற்காக? என்ன செய்தல் வேண்டும்? என்னும் அறிவிற்காகவே.

*சாற்றிறங்கள் குப்பை. ஞானச்செயலுக்கு ஆகாது.*
*செயல் இல்லையேல் ஒன்றுமில்லை.*
*விந்து நாறிச் சாக வேண்டியதுதான்.*

ஞானச் செயல் என்பது சூரியகலை( வலக்கண்), சந்திர கலை (இடக் கண்), அக்கினி கலை (புருவ மத்தி) ஆகியனவற்றை ஒரே நேர்கோட்டில் நிறுத்துதல். அப்பொழுது 3 கலைகளும் ஒன்றாக இணைந்து மேலேறும். அதை சூட்சமமாகக் காட்டவே முப்புரி நூல் அணிவித்தனர். பெண்கள் முச்சடையிட்டுக் கொண்டனர்.

## இதற்கு இன்னும் பல நூல் ஆதாரங்கள் இதோ:

### ஞானக் குறள் :

நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
எல்லையில் லாத சிவம்.

நல்லவற்றைக் கூறும் பல ஞான நூல்களைப் படிப்பதால் மட்டும் எல்லையில்லா சிவத்தையுணர்தல் அரிது.

### சச்சிதானந்த சுவாமிகள்: :

“ஏட்டைப் படித்திங் கிறுமாப்பா லென்னபயன்
நாட்டம் படித்தன்றோ நாமறுப்பம் - வாட்டமெலாம்
எச்சனனத் தேனு மிரும்பொருளை நாடாத
எச்சத்தா லன்றோ இவை.”

### அருணகிரியந்தாதி :

“கற்றதனாற் றொல்லைவினைக் கட்டறுமோ நல்லகுலம்
பெற்றதினாற் போமோ பிறவிநோய் - உற்றகடல்
நஞ்சுகந்து கொண்டருணை நாதரடி தாமரையை
நெஞ்சுகந்து கொள்ளா நெறி.”

### சிற்றம்பல நாடிகள் :

“தற்கம் படித்துத் தலைவெடித்துக் கொள்ளுமதைக்
கற்கநினையா தருளைக் காட்டுங் கருணையனோ.”

### சச்சிதானந்த விளக்கம் :

“கோடிபல நூலறிவு வேதமுறை பேசினுங்
குருபாதம் வெளியாகுமோ.”

### திருவருட்பிரகாச வள்ளலார் :

“சதுமறையாகம சாத்திரமெல்லாஞ் சந்தைப்படிப்பு நஞ் சொந்தப்படிப்போ
விதுநெறி சுத்தசன் மார்க்கத்தின் சாகாவித்தையை கற்றனனுத் தரமெனுமோர்
பொதுவளர் திசைநோக்கி வந்தனனென்றும் பொன்றாமை வேண்டிடிலென் றோழி
நீதான் அதுவிது வென்னாம லாடோடிபந்து வருட்பெருஞ்சோதி கண்டாடோடி பந்து.”

## சிவபோதசாரம் :

“கற்குமடப் பட்டுமிகக் கற்றவெலாங் கற்றவர்பாற்
றற்கமிட்டு நாய்போலச் சள்ளிடவோ - நற்கருணை
வெள்ள மொடுங்கும் விரிசடையார்க் காளாகி
யுள்ள மொடுங்க வல்லவோ.”

## சசிவன்ன போதம் :

“ஆகம விதங்க ளறிவார்கள் பரமறியார்
யோகமொ டுறங்கு மவரேபர முணர்ந்தோர்
புராண மிதிகாச மெவையும்பொருளனைத்தின்
பிராண நறியா துளவிடத்திவை பிதற்றே.”

ஆக சாத்திரங்களைப் படிப்பதால் மட்டும் பலனில்லை. செயல் தேவை.

## கல்வி ஆதாரம். செயலே முக்கியம்.

## “தன்னை யறிந்தால் தலைவனைக் காணமுடியும் ”

என்பதை அலசி ஆராயாமல் விட்டதே உண்மை ஞானம் மறைபட்டதிற்குக் காரணம்.

அதற்கு எடுத்துக்காட்டாக, வீடுகளிலும் ஆலயங்களிலும் (ஆன்மா இலயிக்கும் இடங்களிலும்) இறைவனை வணங்கும் போதும், கற்பூரம், சாம்பிராணிப்புகை, தேங்காய் இம் மூன்றையும் பயன்படுத்துவது எதற்கு? இறைவனை மகிழ்விப்பதற்காக என்று கூறி வாழ்நாளை வீணாக்கி வருகிறோம். இவைகளுடைய தத்துவங்கள் (உண்மைகள்) இரகசியமாக மறைக்கப்பட்டு இருக்கின்றன. மறைக்கப்பட்டிருப்பதால்தான் வேதங்கள் மறைகள் எனப்பட்டன.

இறைவன் தூபதீபங்களுக்கும் தேங்காய்க்கும் ஆசைப்படுபவரா? எங்கும் எதிலும் நிறைந்துள்ள இறைவனுக்கு இச்சையுண்டா? இந்த அற்பப் பொருள்களைக் காட்டி அவருடைய அருளைப் பெறமுடியுமா? தேங்காய், மாயையாகிய மட்டையினால் மறைபட்டும், பற்றாகிய நாரினால் கட்டப்பட்டும், ஆசையாகிய சிரட்டையினால் மூடப்பட்டும் இருக்கின்ற உண்மையாகியது (உள்+மெய் = சிவம்). அதனுள் இருக்கும் நீராகிய சத்தியும், இரண்டும் இணைந்தபின் உண்டாகிய உடலில் ஓடும் சீவன் சாம்பிராணிப் புகை. பிராணன் ஒளியைப் பிரகாசிப்பதையும், மன அசைவை நிறுத்துவதற்கும் கற்பூர ஒளியைக் காட்டினார்கள். இவைகளை அறிந்து உணர்வதே கல்வியின் பயன்.

இதைப்போலவே மறைக்(கப்பட்டுள்ள)கருத்துக்களை, நம் நாட்டின் உருவமைப்பிலும், நம் உடல் அமைப்பிலும், தெய்வமைப்பிலும், விழா வினைகளின் அமைப்பிலும், தெய்வ ஆலயங்களுள்ள ஊர்ப்பெயரின் அமைப்பிலும், மனிதர்களின் பெயரமைப்பிலும், வீட்டுச்சுத்தம், தேகசுத்தம், ஆகாரசுத்தம் முதலிய அமைப்பிலும் ஞானிகள் நூல்களின்

சாரங்களாகத் தந்திருக்கின்றனர். இவைகளைப் புரிந்துகொண்டால் நூல்களின் கருத்துக்கள் எளிதில் விளங்கும்.

ஞானவினையானது உலகத்தில் சஞ்சரிக்கவும், யோகம் என்னும் தந்திரத்தை (தன்+திறத்தை) அறியாமல் மனம் கலங்கும் சீவப் பிறவியற்க்குப் பேருதவியாக இருக்கும் என்னும் எண்ணத்துடன் எமக்குப் புரிந்தவரை விளக்கப்பட்டுள்ளது.

இதைத் தேடுதல் வேட்டையிலுள்ளவர்கள் கண்டால் ஆநந்தப்படுவர். மற்றவர்கள் படித்தவுடன் தீர்மானிக்காமல், பூரணமாகப் படித்துத் தீர்மானிக்கவேண்டுகிறேன்.

நிறையிருப்பின் அடைவீர் ஆநந்தம், குறையிருப்பின் கூறுவீர் என்னிடம் (திருத்திக்கொள்ள).
மனு வாழ, மானுடம் பயன் பெறட்டும்.



ஞானவெட்டியான்

திண்டுக்கல்

# ஞானக் குறள்


| | பொருளடக்கம் | பால் |
|---|---|---|
| | வீட்டு நெறிப் பால் | |
| 1 | மோட்சம் செல்லும் வழி | 1 |
| 2 | உடம்பின் பயன் | 1 |
| 3 | உள்ளுடம்பின் நிலைமை | 1 |
| 4 | நாடி தாரணை | 1 |
| 5 | வாயு தாரணை | 1 |
| 6 | அங்கி தாரணை | 1 |
| 7 | அமுத தாரணை | 1 |
| 8 | அருச்சனை | 1 |
| 9 | உள்ளுணர்வு | 1 |
| 10 | பக்தியுடைமை | 1 |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 1 | **மோட்சம் செல்லும் வழி ( 1 – 10 )** |
| 1 | **ஆதியாய் நின்ற வறிவுமுத லெழுத்<br>தோதிய நூலின் பயன்.** |

மனிதர்கள் கற்ற நூல்களின் பயன் என்னவெனில் எல்லாப்பொருட்களுக்கும் ஆதிமூலமாயும், முன்னதாகவும் உதித்த முதல் எழுத்தாகியது குத்தெழுத்தே -( .) அறிவினுள்ளிருக்கும் உணர்வைக் குறிக்கும் எழுத்தே குத்தெழுத்து. நூல்களைப் படிப்பதனால் உண்டாகும் பயன் என்னவெனில் தனக்குள்ளே இருக்கும் ஆதிப்பொருளான அறிவை உணர்வதே.

**வாசிட்டம் :** "அறியா வறிவை யறியாரே"

**தேவபூசை கதை :** "தெய்வந்தானியாதென் றோதில், கேவலமே யரியல்ல, அரனல்ல, பூதவுடற் கிடைத்ததல்ல, வோவுமன மன்றடி முடியுமிலாச் செயப்படா உணர்வே தெய்வம்."

**திருமந்திரம் :**

"தரணி சலங் கனல் காற்றத்த வானம்
அரணிய பானு வருந் திங்க ளங்கி
முரணிய தாரகை முன்னிய வொன்பான்
பிரணவ மாகும் பெரு நெறிதானே"

தரணி - நிலம்; சலம் - நீர்; கனல் - தீ; அரணிய – அழகிய ;
அங்கி - சிவவேள்வித் தீ ; காட்டுத் தீ - ஆகவனீயம்;
வீட்டுத் தீ - காருகபத்தியம்; பாட்டுத் தீ - தெக்கணாக்கினி
முரணிய - வலிமை மிக்க; பாட்டு - ஞானம்.

நிலம், நீர், தீ, காற்று ஆகியவைகளுக்கு இடமளிக்கும் ஆகாயமாகிய வானம், சூரியன், சந்திரன், விண்மீன்கள், இவைகளின் சந்தியால் விளையும் சிவ வேள்வித் தீ ஆகிய ஒன்பதும் பிரணவம் எனப்படும் ஓங்காரத்துள்ளே உள்ள ஒளியாம்.

**ஆதியெழுத்தும் ஓங்காரமே. - அதுவே சிவபெருமானின் சார்புருவமாம் .**

# ஞானக் குறள்

1 ## வீட்டுநெறிப்பால்

1 ### மோட்சம் செல்லும் வழி (1-10)

2 **பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந்**
**தரமாறிற் றோன்றும் பிறப்பு .**

நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களின் சூக்கும சக்திகள், அளவின்படி அன்னத்தில் கலந்து, அந்த அன்னத்தினாலேயே, நாதபிந்து கலைகள் உண்டாகின்றன.

**திருமந்திரம் :**

"விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதலைந்தும் ஈரைந்தொ டேறிப்
பொழிந்த புனல்பூதம் போற்றுங் கரணம்
ஒழிந்த நுதலுச்சி உள்ளே ஒளித்ததே."

கணவனும் மனைவியும் கருத்தொருமித்து அன்புகொண்டு இன்புறும் வேளையில் யோனி விரிந்தது; அதனுள் லிங்கம் விழுந்தது. அதிலிருந்து உணர்வு கலங்கி ஒழுகியது விந்து.

நுண்ணுடலில் தங்கியிருந்த ஒளி, ஓசை, ஊறு, சுவை, நாற்றம் எனும் நுண்மை ஐந்தும், அறிதற் கருவி ஐந்து செய்தற் கருவி ஐந்து ஆகப் பத்துடன் கூடிய மழையாகப் பொழியும் நீர் முதலாகச் சொல்லப்படும் ஐம்பூதங்களும் தோன்றின. அவற்றால் போற்றப்படும் கரணங்களும் தோன்றின.

புருவநடுவிலும் உச்சியிலும் நின்று உணரும் தொழிலும் இடையறாது நிகழத் தொடங்கியது. ஐம்பூதங்களின் சூக்கும சக்திகள், தங்களுடைய கலைகளிலிருந்து பிறப்புக்கு வேண்டிய கலைகளைப் பிரித்து நாத சக்தியில் கலப்பதினால் பிறப்பு உண்டாகிறது.

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 1 | **மோட்சம் செல்லும் வழி ( 1 – 10 )** |
| 3 | **ஓசை பரிசமுருவஞ் சுவை நாற்ற**<br>**மாசை படுத்து மளறு .** |
| | ஐம்பூதங்களின் சூக்கும சக்திகளான சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் ஆகியவைகள் மனத்தில் ஆசைகளோடு சம்பந்தப்படும்போது மனமானது சேறாகிவிடும். அதாவது பஞ்சதன்மாத்திரைகள் ஆசைகளோடு இணயும்போது நரகிற்கு இட்டுச்செல்லும்.<br>**பஞ்சதன்மாத்திரைகள் :** செவி, நாக்கு, கண், மூக்கு, தோல் என்னும் விண், வளி, தீ, நீர், மண், என்னும் பூதங்களின் குணங்களினின்று தனித்த குணங்களை உடைய மேற்படி பூதங்கட்குக் காரணமாயுள்ள - சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் ஆகியன. |
| 4 | **தருமம் பொருள் காமம் வீடெனு நான்கு**<br>**முருவத்தா லாய பயன் .** |
| | ஆத்துமத்தை அறியும் தர்மம், உடலிலுள்ள மகத்தான செல்வம், பரத்தாசை, இப்போது வசிக்கும் வீடாகிய உடலை (தேசம்)விட்டு ஆன்மா நீங்கியபின் அது வசிப்பதற்கு வேண்டிய வீடாகிய மோட்சம்(உபதேசம்), ஆகிய நான்கும் இத் தேகத்தினால் உண்டாகும் பயன்களாகும். ஆத்மா இத்தேகத்தைக் கொண்டே, அறம்(தர்மம்), பொருள்(திரவியம்), இன்பம்(காமம்) என்னும் வழிகளில் சென்று வீடுபேறு(மோட்சத்தை) அடைகிறது.<br><br>**விளக்கம் :** நாதபிந்து கலைகள் சேர்ந்து உடல் உருவாக்கப் பட்டபோது, அறம்(தர்மம்) என்னும் மகத்தான ஒரு ஒப்பற்ற சத்தியைக் கொண்டே அமைக்கப் பெற்றது. உலக செல்வம் அனைத்துமே உடலையே உறைவிடமாக ஆக்கிக் கொண்டுள்ளன.<br><br>**"அண்டத்திலுள்ளது பிண்டத்தில் "** என்னும் முதுமொழி, இகவாழ்வை மட்டுமே அறிந்தவர்களையும் கூட சிந்திக்க வைக்கும். சிந்திக்கவில்லை எனில் பேரிழப்பு அவர்களுக்குத்தான். உடலில் உள்ள செல்வங்களின் நிழல்களே உலகில் தோற்றமாய்த் தோன்றுகின்றன. அறிவுடையோர், உண்மைச் செல்வத்தின் சாயைகளைக் கொண்டே தர்மம் என்பதில் சம்பந்தப்படுகிறார்கள். உண்மையான செல்வத்தின் கெதி (மூச்சோட்டம்) என்னவாகிறது ? |

| | |
|---|---|
| | இவ்வாறே, ***உடலிலுள்ள உண்மையான செல்வங்களைத் தருமத்தில் இணைப்பித்தலே ஞான வினைகளாகும் .*** <br><br> அறமும், செல்வமும் சேருவதால் ஆன்ம சம்பந்தமாகிய புண்ணியம் என்னும் வினை உண்டாகின்றது. இதனால் ஞான வாழ்க்கை அமைகிறது. அறத்தையும், செல்வத்தையும் இணைப்பதற்கு ஒரு சிற்பி வேண்டும். அதுவே காமம் (இன்பம் - இதுவும் நிழலே). உடலோடு ஆன்மா கூடி உறவாடும்போது, உலக வாழ்வில் இருக்க ஒரு வீடு(தேசம்) இருப்பதுபோல், ஆன்மாவாகிய சீவன் (சிவன்) விலகியபின், சீவன் வசிக்க இன்னுமொரு வீடு (பரவீடு - பரதேசம்) வேண்டியதுதானே? |
| 5 | ***நிலமைந்து நீர் நான்கு நீடங்கி மூன்றே <br> யுலவை யிரண்டொன் றுவிண் .*** |
| | ***நிலம்_ 5 :*** மெய், வாய், கண், மூக்கு, செவி <br><br> ***நீர்_4 :*** ஆநந்தம், துக்கம் ஆகியவைகளால் - கண்ணில் இருந்து வரும் நீர், - (உள்முகத்திலிருந்து) இடக் - கண்ணிலிருந்து வெளிவரும் - சந்திராமிர்தம், வலக்கண்ணிலிருந்து - வரும் சூரியாமிர்தம், நாதநீராகிய - சுக்கிலமும் (விந்து). <br><br> ***அக்கினி .... 3 :*** சூர்யாக்கினி, சந்திராக்கினி, மூலாக்கினி <br><br> ***வாயு (உலவை) ...2 :*** பிராணவாயு, அபானவாயு. <br><br> ***ஆகாயம்_1 :*** வெற்றிடமாம்(சூனியத்திலிருக்கும் துவாத சாந்தப் - பெருவெளி) இராப்பகலற்ற – சிதாகாசமே . மானுட உடல் மேற்படி விகிதத்தில் உருவாகியுள்ளது. |
| 6 | ***மாயன் பிரமனு ருத்திரன் மகேசனோ <br> டாயுஞ்சிவ மூர்த்தி யைந்து .*** |
| | ***சிவமூர்த்திகள் 5 பேர்கள் :*** <br> பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசன், சதாசிவன். <br><br> பிரமன்..........நிலம்(பிருதிவி) <br> விட்டுணு.........நீர் <br> உருத்திரன்.......நெருப்பு <br> மகேசன்.........வாயு <br> சிவன்(சீவன்)....ஆகாயம் |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 1 | **மோட்சம் செல்லும் வழி ( 1 – 10 )** |
| 7 | **மாலய னங்கி யிரவிமதி யுமையோ<br>டேலும் திகழ்சத்தி யாறு .** |
| | விட்டுணு சத்தியான அலைமகளும்(இலக்குமியும்), பிரமனின் சத்தியான கலைமகளும்(சரசுவதியும்), அக்கினியும்(அங்கி), சூரியனும்(ரவி), சந்திரனும் (மதி), மலைமகளான(பார்வதி) உமையும் தேகத்தில் பொருந்தி(ஏலும்) ஒளிவீசுகின்ற (திகழ்) சத்திகள் ஆறு.<br>**திருமகள் - இலக்குமி :** ஞானவினைகளுக்கு(கர்மாக்கள்), இலட்சியத்திற்கு<br>**கலைமகள் - சரசுவதி :** அறிவிற்கு<br>**அக்கினி :** அஞ்ஞான இருளையகற்ற, பிராணணைப் பலப்படுத்த<br>**சூரியன் :** பிரமத்தைக் காட்ட<br>**சந்திரன் :** தேகத்தைப் பார்ப்பதற்கு<br>**மலைமகள் - பார்வதி :** ஞானத்தைக் கொடுக்க |
| 8 | **தொக்குதிரத் தோடூன் மூளைநிண மென்பு<br>சுக்கிலந் தாதுக்க ளேழு .** |
| | உடல்(தொக்கு), இரத்தம், மாமிசம்(ஊன்), மூளை, கொழுப்பு(நிணம்), எலும்பு(சுட்ட எலும்புச் சாம்பலாகிய அஸ்தி), சுக்கிலம் ஆக தாதுக்கள் ஏழு. |
| 9 | **மண்ணோடு நீரங்கி மதியொடு காற்றிரவி<br>விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு .** |
| | நிலம், நீர், அக்கினி, சந்திரன், வாயு, சூரியன், ஆகாயம், ஆத்துமா(பிராணண் - எச்சமூர்த்தி)ஆக மூர்த்திகள் எட்டு. இவைகளையே எட்டு கைகளாக இறைவனின் படத்தில் முன்னவர்கள் சித்தரித்துள்ளனர்.<br>**திருமந்திரம் :**<br><br>"எட்டினுள் ஐந்தாகும் இந்திரி யங்களுங் கட்டிய மூன்று கரணமு மாய்விடும்."<br><br>அருவுடலாகிய நுண்ணுடல் ஒளி, ஓசை, ஊறு, சுவை, நாற்றம் என்னும் புலன்கள் ஐந்தும், அகப்புறக் கலன்களாகிய மனம், எழுச்சி, இறுப்பு என்னும் கரணங்கள் மூன்றும் ஆகிய எட்டினால் ஆகியது. |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 1 | **மோட்சம் செல்லும் வழி ( 1 – 10 )** |
| 10 | இவையெல் லாங்கூடி யுடம்பாய வொன்றி<br>னவையெல்லா மானது விந்து . |
| | விந்துவாகிய சுக்கிலமே மேலே சொன்ன செல்வங்களை எல்லாம் உண்டாக்கியது. அச்செல்வங்களெல்லாம் ஒன்று சேர்ந்து உடம்பை உண்டாக்கியது. **ஆகவே விந்துவாகிய சுக்கிலமே மூலவித்து .** |

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 2 | **உடம்பின் பயன் ( 11 – 20 )** |
| 11 | உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லா<br>முடம்பினி லுத்தமனைக் காண் . |
| | இந்த மனு உடலைப் பெற்றது இதற்குள் கடவுளைக் காண்பதற்கேயாம். |
| 12 | உணர்வாவ வெல்லா முடம்பின் பயனே<br>யுணர்க உணர்வு டையார் . |
| | அறிவுடையவர்கள் அறிவைப் பயன்படுத்தி இறைவனை (இவ்வுடம்பில்) உணர்வதே இவ்வுடம்பு எடுத்ததின் பயன் என்றறிவர்.<br>**திருமந்திரம் :**<br>"உணர்வு மவனே யுயிரு மவனே<br>புணர்வு மவனே புலவி யவனே<br>யிணரு மவன்றன்னை யெண்ணலு மாகான்<br>துணரின் மலர்க்கந்தந் துன்னி நின்றானே."<br>புலவி = பிணக்கு. துணர் = கொத்து. இணரும் = இதயத்தில் கலந்திருக்கும். சிவனும், அவனின் அடிமையாம் உயிரும், மலரும் மணமும் போல இருக்கும். அதனால், உயிர்களின் உணர்வும் அவனே, உயிரும் அவனே, புணரும் புணர்வும் அவனே, புலப்பும் அவனே. உள்ளத் தாமரையாகிய பூங்கொத்தில் இடையறாது கலந்தருள்கின்றனன். எனினும் அழுந்தி அறிவதாகிய அனுபவத்தாலன்றி, எழுந்து மொழிவதாகிய சொல்லால் கூற முன்னிலையாகிய எண்ணத்தால் எண்ணவும் ஆகான். |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 2 | **உடம்பின் பயன் ( 11 – 20 )** |
| 13 | **ஒருபய னாவ துடம்பின் பயனே<br>தருபயனாஞ் சங்கரனைச் சார் .** |

தரும் - இக பரத்தைத் தரும்;
சங்கரனை - தீமைகளையும், அல்லன என்று ஒதுக்கப்பட்ட, கூடாதவைகளையும் அழிக்கும் அரனை; ஒரு பயன் - ஒப்பற்ற தனிப்பெரும் பயன்

**"சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி"** என்றும் ஆன்றோர்கள் கூறியிருப்பதால் தேகத்திலுறையும் (மெய்யில்+உறையும்) தெய்வத்தை ஆதியாகிய விந்துநாதமாகிய ஒலியால் உணர்ந்து அறிவதே மனுவுக்கு அளிக்கப்பட்ட ஒப்பற்ற பயன்.

**திருமந்திரம் :**

"நாதமுடிவிலே நல்லாளிருப்பது
நாதமுடிவிலே நல்யோகமிருப்பது
நாதமுடிவிலே நல்ஞானமிருப்பது
நாதமுடிவிலே நஞ்சுண்ட கண்டனே"

**ஓசை முடியும் இடமே திருவருள் வெளிப்படும் இடம் .**

அதுவே அகத்தவம். அத்தவப்பேறே திருவடி உணர்வு. அங்கே திருநீலகண்டன் வெளிப்படுவான்.

"சத்தியார் கோயி லிடவலஞ் சாதித்தான்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாம்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படும்
சத்தியஞ் சொன்னோஞ் சதாநந்தி ஆணையே."

சத்தியார்கோயில் = உடல். மத்தியானம் = மத்தியதானம். வாத்தியம் = நாதம்.

உடலாகிய கோயிலில் உயிர்ப்பை வலமூக்கின் வழிநிறுத்தினால் புருவநடுவாம் பரவெளியில் நாதமாகிய ஒலியினைக் கேட்கலாம். "தித்தித்தா"எனும் தாளத்திற்கேற்பக் கூத்தபிரான் வெளிப்படுவான். நந்திமீது ஆணை. இதுவே சத்தியம்.

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 2 | **உடம்பின் பயன் ( 11 – 20 )** |
| 14 | **பிறப்பினாற் பெற்ற பயனாவ தெல்லாந்<br>துறப்பதாந் தூநெறிக்கட் சென்று .** |
| | தூ - பரிசுத்தமாகிய;<br>நெறிக்கண் - வழியின் மூலமாக;<br>துறப்பதாம் - மும்மலங்களாகிய, ஆணவம், மாயை, கன்மம் ஆகியவற்றிலிருந்து நீங்கி இருத்தலாகும்<br><br>பரிசுத்த வழியில் சென்று எல்லாவகையான இச்சைகளிலிருந்தும் நீங்கி இருத்தலே (வெறுத்து ஒதுக்குவதே) பிறப்பினால் பெற்ற பயன்.<br>"துறவு" என்பது மும்மலங்களிலிருந்தும், இகபர போகங்களில் மனத்தை அலையவொட்டாது, எல்லா வகையான இச்சைகளிலிருந்தும் நீங்கி இருத்தலே.<br><br>*"ஒகானூ பீஹி மினுஸ் ஸாஹிதீன் "(புனித குர்-ஆன் -12-12)*<br><br>அவர்கள் சாதனையால் (அல்லாவையன்றி ஏனையவைகளை) வெறுத்துவிட்டார்கள்.<br>உலகத்தையும் - அதன் போகங்களையும் (தவாபு), சுவர்க்கத்தையும், அதன் சுகங்களையும் (நிகுமத்து) நினைத்தாலே அசுத்தம்(முழுக்கு) உண்டாகிவிடும். |
| 15 | **உடம்பினா லன்றி யுணர்வுதா னில்லை<br>யுடம்பினா லுன்னிய தேயாம் .** |
| | உன்னியது - வெளிப்படுதல்<br>ஞானேந்திரிய, கர்மேந்திரியங்களின் மூலமாக ஏற்படும் செயல்களினாலேயே உடலில் ஓங்காரமானது (அறிவு) ஏற்படும். உடலில்லையேல் உணர்வில்லை. |
| 16 | **மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்<br>ஈசனைக் காட்டு முடம்பு .** |
| | கொள்கை - கட்டுப்பாடு<br>மூல மலங்களாகிய (அல்லன - விலக்கப்பட்டவை) அழுக்குகளை நீக்கும் கட்டுப்பாடு மனத்தில் அடைந்து விட்டால், எல்லாம் வல்ல ஈசனை உடம்பே சுட்டிக் காட்டிவிடும். |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 2 | **உடம்பின் பயன் ( 11 – 20 )** |
| 17 | **ஓசை யுணர்வுக ளெல்லாந் தருவிக்கும்<br>நேசத்தா லாய வுடம்பு .** |
| | நேசத்தாலாய - ஞானேந்திரிய, கர்மேந்திரிய ஒற்றுமைகளினால் உண்டாகிய;<br>உணர்வுகள் - அறிவும் அறிவின் தொடர்புடையவைகளும்;<br>ஞானேந்திரிய, கர்மேந்திரிய ஒற்றுமைகளினால் உண்டாகிய உடல், ஒலியால் (சப தபங்களால் உண்டாக்கும் ஒலி அலைகளினால்) அறிவு முதலிய உருவம் இல்லாதவைகளை(அருபங்களை)ப் பார்த்துணரும் நிலைக்குக் கொண்டு வந்துவிடும். |
| 18 | **உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே<br>அயிர்ப்பின்றி யாதியை நாடு .** |
| | ஐயமாகிய சந்தேகம் தீர்ந்தால் சன் (ஒளிபெற்ற) + தேகம் கிடைக்கும்.<br>உடலிலுள்ள ஐம்புலன்கள், மூலாக்கினி, சூரிய சந்திரன், பி(வி)ந்துநாதம், இவைகளின் கலைகளை எழுப்பி, சீவனிடத்தில் சமர்ப்பித்தால், ஆன்ம ஒளியாகிய(சீவப்பிரகாசத்தோடு) கலந்து, அறிவுக்குப் பலத்தை கொடுக்கும். கலைகளை எழுப்ப, பார்வையையும் மனத்தையும் ஒன்றுகூட்டி ஒழிவில்லா இலக்குடன் உச்சியை நாடுதல் வேண்டும்.<br>**ஆதி - ஆதீ - ஆ+தீ - ஆன்மாவாகிய தீ - ஆன்ம அக்கினி!**<br>ஐயத்திற்கிடமின்றி ஆதியை நாட உயிருக்குறுதி - இதுவே உடலின் பயன். |
| 19 | **உடம்பினாற் பெற்ற பயனாவ வெல்லாம்<br>திடம்பட வீசனைத் தேடு .** |
| | ஈசனை உறுதிபடத் தேடுவதற்காகவே உடல் உனக்குத் தரப்பட்டுள்ளது. |
| 20 | **அன்னத்தா லாய உடம்பின் பயனெல்லா<br>முன்னோனைக் காட்டி விடும் .** |
| | ஆண்களுக்கு அன்னத்தினால் விந்தும், பெண்களுக்குச் சுரோணிதமும் உண்டாகிறது. இவையிரண்டும் கூடித்தான் இன்னுமொரு உடல் எடுக்கிறது. ஒரு சவத்திலிருந்து இன்னுமொரு சவம் வெளிவருதலால் அதற்குப் பெயர் "பிர+சவம்". இவைகளையுண்டாக்கியது (நாதகலைகள்) அன்னமே. இப்படிப்பட்ட உடல் செம்மை (செம்+மெய்) ஆனால், அது நம் முன்னோனாகிய இறைவனக் காட்டிவிடும். |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 3 | **உள்ளுடம்பின் ( சூக்கும சரீரம் ) நிலைமை ( 21 – 30 )** |
| 21 | **கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலா<br>முற்றுடம்பா லாய வுணர்வு .** |
| | ஊன்றிப்பார்ப்பதனால் (perception) உண்டாகும் சூக்கும உடலில் உண்டாகும் அறிவால் உருவாகும் உணர்வினால் எல்லாவற்றையும் கற்கலாம், கேட்கலாம், அறிவுக்கண்ணால் பார்க்கலாம். இச்சருக்கத்தில், உடலென்பது சூக்கும உடலேயாகும். இந்தத் தகுதியை அடைந்தவர்கள் மறைகளில் இருக்கும் சாற்றிறப் பூட்டுக்களை உடைத்துப் பொருள் காணமுடியும், மருமங்களையும் அறியமுடியும். |
| 22 | **வெள்ளி பொன் மேனிய தொக்கும் வினையுடைய<br>வுள்ளுடம்பி னாய வொளி .** |
| | தூல உடல் எப்படி உள்ளதோ, அதைப் போல சூக்கும உடலைக் கண்டால் எப்படியிருக்கும் என்றால், வெள்ளியாகிய சுக்கிலத்தின் நிறத்தையும் நாதத்தின் பொன் நிறத்தையும் பொருந்தி இருக்கும். |
| 23 | **சென்றுண்டு வந்து திரிதரு முள்ளுடம்பு<br>என்றுங் கெடாத திது .** |
| | சூக்கும உடலானது, மனம் நினைக்கும் இடங்களுக்குச் சென்று, அவ்விடங்களில் உள்ளவற்றைக் கிரகித்துக் கொண்டு தூலத்திற்குத் திரும்பி வந்து திரிந்து கொண்டிருக்கும். இப்படிப் பட்ட சூக்கும உடல் தூல உடலைப்போல் அழிவதில்லை. |
| 24 | **வருபய னுண்டு மகிழ்ந்துடனா நிற்கு<br>மொருபயனைக் காட்டு முடம்பு .** |
| | சூக்கும உடலானது வேண்டிய பலனை அடைந்து, ஆனந்தித்து மகிழ்வதோடு, கனலின் வெம்மையும் ஒளியும் கூடிய ஒப்புயர்வற்ற ஓங்காரத்தில் (பிரணவத்தில்) நிலைத்து நிற்கும் படியான பலனைக் காட்டும் (வெளிப்படுத்தும்). ஓங்காரத்தின் பயனாவது எல்லாத் தத்துவங்களையும் (உண்மை, (உள் + மெய்)) காட்டி இரவு பகலற்ற சிதாகாயம் (சிதா+காயம்) அணைந்து நிலைத்து நிற்பதே. |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 3 | **உள்ளுடம்பின் ( சூக்கும சரீரம் ) நிலைமை ( 21 – 30 )** |
| 25 | *அல்லற் பிறப்பை யகற்றுவிக்கு மாய்ந்தாய*<br>*தொல்லை யுடம்பின் றொடர்பு .* |
| | ஆய்ந்து - ஆராய்ச்சியினால்; ஆய - உண்டாகிய;<br><br>ஆராய்ச்சியினால் உண்டாகிய தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கும் தூல உடலின் தொடர்பாகிய சூக்கும உடலானது, தொல்லைகளுடன் கூடிய இப்பிறவிப் பிணியை அகற்றும் (ஒழித்தலில்லை). |
| 26 | *நல்வினையுந் தீவினையு முண்டு திரிதருஞ்*<br>*செய்வினைக்கும் வித்தா முடம்பு .* |
| | தூல உடல் நல்வினையையும் தீவினையையும் அடைந்து திரிந்துகொண்டிருக்கும். சூக்கும உடலோ ஞான காரியங்கள் செய்வதற்கு விதையாக நிற்கும். |
| 27 | *உள்ளுடம்பின் வாழ்வன வொன்பது மேழைக்*<br>*கள்ள வுடம்பாகி விடும் .* |
| | தூல உடலிலுள்ள ஒன்பது வாயில்கள் அறிவின் வயப்படாததாலும், சூக்கும உடலின் ஒன்பது சூக்கும வாயில்கள் அறிவின் வழியே செல்வதாலும், தூல உடல் செயலற்ற நிழலுடம்பாகிவிடும். தூல உடலிலுள்ள ஒன்பது வாயில்கள் வேறு; சூக்கும உடலின் சூக்கும வாயில்கள் வேறு. |
| 28 | *பொய்க்கெல்லாம் பாசனமா யுள்ளதற் கோர்வித்தாகு*<br>*மெய்க்குள்ளா மாய வுடம்பு .* |
| | எல்லாப் பொய்கட்கும் ஆதாரமாயுள்ள தூல உடலுக்குள் இருக்கும் சூக்கும உடல் மெய்க்கு ஒரு வித்தாக உள்ளது. ஞானவினைக்கு, ஐம்புலன்கள் ஆசையற்று நின்று சூக்கும உடலையடையும். தூல உடலில் உள்ள ஐம்புலன்கள் ஞானத்தோடு ஒவ்வாது தன் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப புரட்சி செய்யும் ஆகையால் "பொய்க்கெல்லாம் பாசனம்" என்றார். |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 3 | **உள்ளுடம்பின் ( சூக்கும சரீரம் ) நிலைமை ( 21 – 30 )** |
| 29 | ***வாயுவினா லாய வுடம்பின் பயனே<br>யாயுவி னெல்லை யது .*** |
| | ஆயுவு - ஆயுள்.<br>உடலிலுள்ள உயிரின் இயக்கத்தினால் ஏற்பட்ட சீவவாயுவுவே ஆயுள் முடிவதற்கு ஆதாரமாயுள்ளது. சீவவாயுவுக்கு ஆயுளை முடிப்பதற்கு அதிகாரம் உண்டானதற்குக் காரணம் அசைவே(சலனம்). |
| 30 | ***ஒன்பது வாசலுமொக்க வடைத்தக்கா<br>லன்பதி லொன்றா மரன் .*** |
| | குருபிரான் சுட்டிக்காட்டும் (சூக்கும) வாயில்கள் ஒன்பதையும் (நவத்துவாரம்) அடைத்தால் ஐம்பது பீசங்களோடு ஐம்பத்தி ஒன்றாகச் சிவன் இருப்பான்.<br>***இவ்வைம்பத்தொன்றுமே சிதம்பர இரகசியமாகும் .***<br>"ஈறுசெய் மூலமதில் நாலதாகும் எண்ணரிய லிங்கத்தே ஆறதாகும் கூறியதோர் ஆலடியில் பத்ததாகும் குறிப்புடைய முக்கோணத்தில் பனிரெண்டதாகும் பேரரிய காலதனில் பதினாறதாகும் பேசரிய வாயதனில் ரெண்டதாகும் மாரிலாக் குருபதத்தே ஒன்றதாகும் மன்னிய சீரட்சரங்க ளன்பத்தொன்றே குருபதத்தி லொன்றென்பதே பரமசிவமாகும்." (நூலாதாரம் தெரியவில்லை) |

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 4 | **நாடி தாரணை ( 31 - 40 )** |
| 31 | ***எழுபத் தீராயிர நாடி யவற்றுள்<br>முழுபத்து நாடி முதல் .*** |
| | உடலிலுள்ள எழுபத்து ஈராயிரம் நாடிகளுக்குள் உள்ள பூரணமான பத்து நாடிகளுக்குள் முதலானதும் ஆதியானதுமான உயிர் நாடியே தலையானது.<br>***பூரணமான பத்து நாடிகள் :***<br>இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு. இவற்றை முறையே, இடப்பால் நரம்பு, வலப்பால் நரம்பு, நடு நரம்பு, உள்நாக்கு நரம்பு, வலக்கண் நரம்பு, இடக்கண் நரம்பு, |

வலச்செவி நரம்பு, இடச்செவி நரம்பு, கருவாய் நரம்பு, எருவாய் நரம்பு என்பர்.

### வளி (காற்று) பத்து :

உயிர்வளி, மலக் காற்று, தொழிற் காற்று, ஒலிக் காற்று, நிரவு காற்று, தும்மற் காற்று, விழிக் காற்று, கொட்டாவி (கெட்ட ஆவி), இமைக் காற்று, வீங்கற் காற்று. இவைகளை முறையே, பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் எனக் கூறுவரும் உண்டு.

இவற்றை திருமூலர்,

“நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்” என்று அவத்தை பேதத்தில் கூறியுள்ளார்.

நாடிகள் உடலின் உந்திச் சுழியிலிருந்து கீழிருந்து மேல்புறமாய் பேய்ச் சுரைக்காயின் கூடுபோல் உடலைப் பின்னி நிற்பன. இவை மொத்தம்72,000 என நூல்கள் கூறுகின்றன. இவற்றின் முழு விவரம் மருத்துவ நூல்களில்தான் கிட்டுகின்றன.

| | |
|---|---|
| தலயில் | 7000 |
| வலது காதில் | 1500 |
| இடது காதில் | 1500 |
| வலது கண்ணில் | 2000 |
| இடது கண்ணில் | 2000 |
| மூக்கில் | 3330 |
| பிடரியில் | 1000 |
| கண்டத்தில் | 1000 |
| வலது கையில் | 1500 |
| இடது கையில் | 1500 |
| தொண்டைக்கும் நாபிக்கும் மத்தியில் | 8990 |
| பிடரியின் கீழ் | 8000 |
| விலாவில் | 3000 |
| கால்களின் சந்தில் | 8000 |
| பீசத்தின் மேல் | 2000 |

| | |
|---|---|
| பீசத்தின் கீழ் | 2000 |
| பாதத்தில் | 1000 |
| பிடரிக்குப் பின்னால் | 3680 |
| கோசம் | 13000 |
| **ஆக நரம்புகள்** | **72000** |

பெருவாரியான ஞான நூல்கள் பத்து நாடிகளுக்குத்தான் முக்கியத்துவம் தருகின்றன. இதிலும் இடகலை, பிங்கலை, சுழிமுனை ஆகிவைகளே மிக அதிகமாக விவாதிக்கப்படுகின்றன.

இடகலை – வாத நாடி

பிங்கலை – பித்த நாடி

சுழிமுனை – சிலேத்தும நாடி

இம்மூன்றையும் வைத்துத்தான் நம் முன்னோர், அதிலும் மருத்துவர்கள் உடலின் நோய்களைக் கண்டறிந்தனர்.

**இ(டை)ட கலை** – இடது நாசியினுள்ளே செல்லும் காற்று. இதுவே ***சந்திர நாடி . சக்தி நாடி*** என்போருமுண்டு.

**பிங்கலை** – வலது நாசியினுள்ளே செல்லும் மூச்சு. இதைச் ***சூரியநாடி , சிவநாடி*** என்பர்.

**சுழிமுனை** – அக்கினி நாடி. இடத்திற்கு இடம் மறுபடும்.

அதாவது அண்டம், பிண்டம், சூக்குமம், அதி சூக்குமம்.

***அறிவால் உணர்வது அண்டம்.***

***உணர்வால் உணர்வது பிண்டம்.***

***நினைவால் உணர்வது சூக்குமம்.***

***கருத்தில் நிற்பது அதிசூக்குமம்.***

சிகுவை – உள்நாக்கு நரம்பு

புருடன் – வலக்கண் நரம்பு

காந்தாரி – இடக்கண் நரம்பு

| | |
|---|---|
| | அத்தி – வலது காது நரம்பு<br>அலம்புடை – இடக் காது நரம்பு<br>சங்கினி – ஆண்(பெண்) குறி நரம்பு<br>குகு – குத நரம்பு<br>ரக்தவியானன் – இனப்பெருக்கத்திற்குறிய சுக்கிலம், முட்டை ஆகியவைகளை வெளித் தள்ளும் நரம்பு |
| 32 | *நரம்பெனு நாடியிவை யினுக்கெல்லா*<br>*முரம்பெறு நாடியொன் றுண்டு .* |
| | நரம்பென்று அழைக்கப்படும் இந்த நாடிகளுக்கு எல்லாம் சக்தியைக் கொடுக்கும் நாடி ஒன்றுண்டு. |
| 33 | *உந்திமுதலா யுறுமுடிகீழ் மேலாய்ப்*<br>*பந்தித்து நிற்கும் பரிந்து .* |
| | உந்தி = நாபியென்பர் சிலர். ஆயினும் உந்தியென்பது உன்+தீ என் விரிவடையும். உன்னுடைய (ஆன்ம)தீயே உந்தி.<br>உறு = பொருந்திய; பரிந்து = தாயன்புடன் பரிந்து;<br>பந்தித்து = உறுதியாக நிலைத்து நின்று;<br>உந்தி, நாபி, உந்திக்கமலம் எனும் பதங்கள் குறிப்பவை ஓங்காரத்தின் மத்திய பகுதியாகிய மணிபூரகமே. உந்தி முதல் உச்சிவரை உறுதியாக நிலைத்து நிற்பது ஆதி நாடியே. இதைக் குண்டலினி என்பர். |
| 34 | *காலொடு கையி னடுவிடத் தாமரை*<br>*நூல்போலு நாடி நுழைந்து .* |
| | இவ்வோங்கார ஆதி நாடியானது, கைமுதல் கால்வரை தாமரை நாளத்தின் நூல்போல் உள்நுழைந்து பரவியிருக்கின்றது.<br>**வசிட்டக்காரர் :**<br>“அறவிந்தவளைய நூலொன்றைக் கூறோ ராயிரமிட்டதிலொரு கூறாப்பென்றாலுந் தறமொவ்வாதறச் சிதறியுண்டாய் நின்றுந்தாக்கி யறிவரிதவற்றின் கதியின் றன்மை.”<br>இவ்விடத்து கதி என்பதை மூச்சோட்டம் எனக்கொள்வர் ஆன்றோர். |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 4 | **நாடி தாரணை ( 31 - 40 )** |
| 35 | **ஆதித்தன்றன் கதிர்போல வந்நாடிகள்**<br>**பேதித்துத் தாம்பரந்த வாறு .** |

சூரியன் தன்னுடைய கதிர்களைப்போல் தன் கலைகளைப் பரப்புவதுபோல, ஆதி ஓங்காரநாடி அசைந்தாடி (சலனமடைந்து) உடலில் தன் கலைகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறது.

வாயு எனபது நம்முடலில் ஓடும் சீவக்காற்று. இதுவே, வாசி, காலெனப் பல மருமப் பெயர்களில் கூறப்பட்டுள்ளன. இதே காற்றுதான் பல்வேறு பெயரெடுக்கின்றன. அருவிநீர் ஓடிவரும் இடங்களிலுள்ள நிலத்தின் வண்ணம் பெருவதைப் போல். வாயு இல்லையேல் சலனமில்லை (அகச் சலனம் & புறச்சலனம்). புறத்தே சில உடலுறுப்புக்கள் வலுவிழப்பதற்கும் அதுவே காரணம்.

ஆயினும், இவ் வாயு எங்கிருந்து மனுவுக்கு வந்தது? எங்குள்ளது? என்னும் வினாக்களுக்கு விஞ்ஞான ரீதியிலான விளக்கங்கள் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. கருப்பத்தில் குழந்தை உருவாகும் பொழுது, வளரும்பொழுதும் குழந்தைக்கு உயிர் இல்லை. அது மாமிச பிண்டம். ஆனால், கருப்பப் பையினுள்ளேதான் அவ்வாயு உள்ளது. ஆனால் தனியாக உள்ளது. மற்ற நீர்வாழ் செந்துக்களுக்கு வைக்கப்பட்டதுபோல் வைக்கப்பட்டுள்ளது. தாயின் கருவரையைவிட்டு வெளியே வந்தவுடனே, சடாரென ஒரு எல்லையிலிருந்து (மருமம்) பிச்சு அடிக்கும் ஆவி தான் சுவாசம். **இதுவே மூல வாயு .**

பிரபஞ்சத்திலிருந்து மூலப் பிரகிருதி முந்நிறத்தில் (வெண்மை, சிவப்பு, கறுப்பு) தோன்றியது. அவைகளே, முச்சக்திகள்.

மாயா(வெண்மை) சக்தி;

அவித்யா(சிவப்பு) சக்தி;

ஆபரண விஷேப(கறுப்பு) சக்தி.

இவைகள் முறையே, மாயை, அஞ்ஞானம், அகங்காரம் எனக் கூறினர்.

மாயா, சத்துவ குணத்தை முதன்மையாகக் கொண்டு விளங்கும். அதில் பரப் பிரும்மம் பிரதிபலிப்பதினால் தோன்றிய பிரதி பிம்பமே, ஈசுவரன்.

இதுவே முதல் சலனம்.

இச்சலனத்தினாலுண்டாகிய சலனச் சங்கிலியால் பிரபஞ்சம் உண்டாகி இயங்கி வருகிறது.

முதல் சலனத்தால், பிரபஞ்சம் இரண்டாகியது.
முதற் பாகம் சமஷ்டி (ஒன்றாயிருத்தல்) ஆகாயம்;
இரண்டாம் பகுதி வியஷ்டி(வெவ்வேறாயிருத்தல்) ஆகாயம்.

வியஷ்டி ஆகாயத்தை நான்கு பகுதிகளாக்கி,அவற்றுள் முதல் பாக வியஷ்டி ஆகாசத்தைக் வாயுவொடு சேர்த்தபோது மனத்தத்துவம் பிறந்தது; அக்கினியொடு சேர்த்தபோது அறிவுத் தத்துவம் பிறந்தது;
நீரொடு சேர்த்தபோது சித்தம் பிறந்தது;
நிலத்தொடு சேர்த்தபோது அகங்காரம் பிறந்தது.
இதுதான் ஐம்பூதங்களின் சலனக் கலவை.

இச்சலனத்தாலேதான், மற்ற சலனங்கள் உண்டாயின. ஆக “வாயு”வும் சலனத்துள் ஒரு பாகம். வாயு இல்லையேல் சலனமில்லை (அகச் சலனம் & புறச்சலனம்).

வாயுவின் வீடு கழுத்துக் கண்டம். அதுவே நடு மூலம். வாயு இல்லையேல் மூச்சில்லை; உயிரில்லை; சலனமில்லை.

**ஆகாசம் வாயுவொடு சேர்ந்தபோது மனம் பிறந்தது ;**

**மனமே நாட்டங்களுக்குக் காரணம் .**

**அக்கினியொடு வாயு சேர்ந்தபோது அறிவு பிறக்கின்றது .** ஆக வாயு அறிவில் செயல்பட்டு வருபவைகளை நாட்டம் எனக் கூறவியலாது.
பிங்கலை இடகலை சுழிமுனை குகுநாடி என்பவை எல்லாம் கற்பனையே.
இம்மாதிரி நாடிகள் இருப்பதாக மருத்துவர்கள் ஒத்துக்கொள்வதில்லை.
வெளிமூச்சுக் காற்று உள்ளே நுழையவும், ஈரலுக்குள் சென்று திரும்பி வரவுமே மூச்சுக்குழல் இருக்கிறது. மற்றபடி வாயுவின் பெரும்பகுதி கபாலக் குகையின் உள்ளே போய் அங்கிருந்து உடலின் பலபகுதிகளுக்கும் பரவி விடுகிறது.
அதனால்தான் இறந்ததும் சவத்திற்கு உடல் ஊதிவிடுகிறது. ஆகவே, நாடிகள் உடலினுள்ளே இருக்கும் நரம்பு மண்டலங்களின் துடிப்பேயாம்.

அதையே, கிராமங்களில், இழவு வீட்டிற்குச் சென்றால், “நாடி எப்போ அடங்குச்சு?” எனக் கேட்பது வழக்க. நாடி என்றால் நோக்கி என்ற பொருள் உண்டு. ஆக, உடலில் சலனமில்லையேல், நாடி அடங்கிவிடுகிறது.
அண்டத்தில் சலனம் வாயுவால்தான். இது புறச் சலனம். பிண்டத்திலும் வாயுவால்தான் சலனம். இது அகச் சலனம். இது இருவகை.
அகம் எனில் மனம். மனச் சலனமும் அகச் சலனம்தான். உடல் சலனமும் அகச் சலனம்தான்.

36 **மெய்யெல்லாமாகி நரம்போ டெலும்பிசைந்து**
**பொய்யில்லை நாடிப் புணர்வு .**

ஆதியாகிய ஓங்கார நாடியானது நரம்பு எலும்போடு சேர்ந்து, உடலோடு கலந்து, உடல் முழுவதும் பரவியுள்ளது. இது பொய்யில்லை; உண்மையே.

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 4 | **நாடி தாரணை ( 31 - 40 )** |
| 37 | *உந்திமுதலாகி யோங்காரத்துட் பொருளாய்<br>நின்றது நாடி நிலை .* |
| | ஓங்காரத்தின் உட்பொருளாக உள்ள குண்டலி உந்திக் கமலமாம் மணிபூரகத்தைத் தன் முதன்நிலையாகக் கொண்டு விளங்குகிறது.<br>உந்தி = உன் + தீ |
| 38 | *நாடிகளூடு போய்ப் புக்க நலஞ்சுடர்தான்<br>வீடு தருமாம் விரைந்து .* |
| | மேற்கூறிய நாடிகளுக்குள் ஊடுருவி உள்ளேபோக ஆன்ம ஒளி விரைந்து வீடுபேற்றைத் தரும். |
| 39 | *நாடி வழக்கமறிந்து செறிந்தடங்கி<br>நீடொளி காண்ப தறிவு .* |
| | ஆன்ம நேய ஞானிகளுடன் நெருங்கிப் பழகி, மனம் அடங்கி ஒடுங்கி அவர்கள் காட்டும் அகத்தவப் பயிற்சி வழியில் சென்றுதான் நீண்ட ஆன்ம ஒளியை அறிவின் மூலமாக உணரமுடியும். |
| 40 | *அறிந்தடங்கி நிற்குமந் நாடிகடோறுஞ்<br>செறிந்தடங்கி நிற்குஞ் சிவம் .* |
| | நோக்கும், மனமும் ஒடுங்கி இருக்கின்ற நாடிகளின் ஆதியாகிய ஓங்கார நாடியில் நிறைந்து நிலைத்து நிற்குமாம் சிவம்(சீவன்). |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 5 | **வாயு தாரணை ( 41 – 50 )** |
| 41 | **மூலத்திற்றோன்றி முடிவிலிரு நான்காகிக்<br>கால்வெளியிற் பன்னிரண்டாங் காண் .** |
| | காற்றானது குண்டலியின் மத்திய பாகத்திலுள்ள வாயு உதிக்குமிடத்தில் உதித்து, குண்டலியின் உச்சியில் இரண்டாகப் பிரிந்து, நான்கு திக்கிலும் பரவி, பேரண்ட வெளியாகிய துவாதசாந்த வெளியில் செல்லும்போது பன்னிரண்டு கலைகளாக வெளிப்பட்டு நிற்கும்.<br><br>“மூலம்” – என்பது மூலாதாரமல்ல. மூலாதாரம் என்னும் பழக்கச் சொல் ஒவ்வொரு பொருளும் உதிக்குமிடம். துவாத சாந்த வெளி யென்பது பிரணவ உச்சியைத் தாண்டிக் கலைகளோடு செல்லும்போது தலைக்கு மேல் பன்னிரு அங்குல அளவில் உள்ளது. **இந்த இடமே இரவு பகலற்ற இடம் .** |
| 42 | **இடைபிங் கலைகளி ரேசக மாற்றி<br>லடையு மரனா ரருள் .** |
| | அரன் என்பதைப் பரமசிவனாகக் கொள்ளாமல் பரம+சீவனாகக் (பர+சீவனாக) கொள்ளல் வேண்டும். ஆகவே, ஆதியெனக் கொள்வோம்.<br>இவ்விடத்து, பீர் முகம்மது அவுலியாவின் ஆநந்தக் களிப்பின் ஒரு பாடலை நினைவு கூருதல் அவசியம்.<br><br>“இவ்வென் றெழுத்ததைப் பற்றி – இரு<br>வாசலைப் பூட்டி யடைத்துப் பிடித்துக்<br>கொல்லன் றுத்திகொண் டூதி – நல்ல<br>கோவலமாய் மூலக் குகையை யெழுப்பி<br>வில்லின்மேல் நாணம்பை யேற்றி – வெகு<br>வேகமா யொன்பது வாச லடைத்து<br>அல்ஹம்தி லொன்றாகி நின்ற – நந்தம்<br>ஆதியை நன்றாகக் கண்டுகொண்டேனே.”<br><br>வளிநிலையாம் மூச்சுப் பயிற்சி குறித்துத் **திருமூலர் :**<br><br>“ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்<br>ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்<br>ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசகம்<br>மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே.” |

வாமம் = இடகலை.
ஈரெட்டு = பதினாறு மாத்திரை, அறுபத்தி நான்கு மாத்திரை.
மாறுதல் = மடை மாறுதல். சிவசிவ என்பது நான்கு மாத்திரை.

“சிவசிவ” எனும் மந்திரமே செந்தமிழ்த் திருமாமறை முடிபு.

## ஏறுதல் – பூரகம் :

சிவசிவ என நான்குமுறை கணித்து(இடது நாசியை வலது கையின் மோதிர விரல், சுண்டு விரல்களால் அடைத்து) வலது நாசித் துவாரத்தினால் தூய மூச்சுக்காற்றை உள்ளிழுத்தல்.

## ஆறுதல் – கும்பகம் :

சிவசிவ எனப் பதினாறுமுறை கணித்து உள்ளிழுத்த மூச்சை மூடி உள்ளே நிறுத்தல்.

## ஊறுதல் – இரேசகம் :

உள் நிறுத்திய மூச்சை சிவசிவ என எட்டுமுறை கணித்து வல நாசித் துளை வழியே மெதுவாக வெளியில் விடுவது.

இவ்வாறே, மடைமாற்றி இடநாசி வழியாகவும் செய்தல் வேண்டும். இங்ஙனம் இயன்ற அளவு மாறிமாறிப் பயிலல் வேண்டும்.

இடகலை,பிங்கலை ஆகிய இரு கலைகளினாலும் பூரக, கும்ப, இரேசகத்தை மாற்றி மாற்றிச் செய்தால் **மூலக் குகையைத்** திறந்து உட்செல்லலாம். இட பிங்கலைகள் என்பது சூரியன், சந்திரன் என்னும் இரு திருவடிகளை அடக்கி வைத்திருக்கும் இட, வலக் கண்களே. இங்கு இரேசித்தல் என்பது ஒன்றுசேர்தலாம். சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்ந்தால் காருவா என்னும் அமாவாசையாகும். அச்சமயமே ஞான வினைகளைத் தொடங்கும் காலம்.

## வாசிட்டம் – புசுண்டர் கதை

“நீ யிங்கெதிர்காணும் பூதவுடலாம் மனைநடுவே பொருந்துமிதய புண்டரிகச் சீதமலரில் உள்ளிரண்டு செறியும்பிராண நபானனென்.”

## திருமந்திரம் :

“விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணென்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுறுக்கயொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக்களிம் பறுத்தானே.”

தலைக்காவல் = சிறந்தகாவல், தலைக்குக் காவல்.
களிம்பு = ஆணவமலம்.

ஆருயிர்களை ஆட்கொள்ள வேண்டிய அருள்வினைக்கு ஈடாக விண்ணாகிய சிவ உலகத்திலிருந்து நில உலகத்திற்கு இறங்கிச் சிவகுருவாக வந்தருளினான்.

| | |
|---|---|
| | மிகவும் குளிர்ச்சி பொருந்திய தாளை(திருவடி)த் தலையில் முன்புறம் அமைத்து அருளினான். அவனே உள்நின்று நெகிழச் செய்து ஒப்பிலாப் பேரின்பக் கண்ணாகிய அகக்கண் காட்டி, அன்பு முதிர்ச்சியால் அருளை வளரச் செய்து களிம்பாம் ஆணவமலத்தை அறுத்தான்.<br><br>அமாவாசை காலத்தில், நாம் வெளிப்படையாகச் செய்யும் வினைகள் எல்லாவற்றையும் உள்முகத்தில் அமைத்துப் பார்க்க மெய் விளங்கும். |
| 43 | **அங்குலியான் மூடிமுறையா லிரேசிக்கிற்<br>பொங்குமாம் பூரகத்தி னுள் .** |
| | விரல்களால் நாசித் துவாரங்களை மூடியும் திறந்தும் இரு கலைகளையும் கலக்கச் செய்தல் வேண்டுமெனக் கூறுவோர் பலர். ஆயினும், குருபிரான் காட்டிய வழியில் முறையாக அங்குலியெனும் புருவமத்தியில் பார்வை வைத்து இரு கலைகளையும் கலக்கச் செய்து பூரகம் செய்யும்போது கலைகள் பொங்கி வழியும்.<br><br>**ஏறுதல் – பூரகம் :**<br>சிவசிவ என நான்குமுறை கணித்து(இடது நாசியை வலது கையின் மோதிர விரல், சுண்டு விரல்களால் அடைத்து) வலது நாசித்துவாரத்தினால் தூய மூச்சுக்காற்றை உள்ளிழுத்தல். |
| 44 | **எண்ணிலியூழி யுடம்பா யிரேசிக்கி<br>லுண்ணிலமை பெற்ற துணர்வு .** |
| | இங்கு “ஊழி” என்பதைக் காலத்திற்கு பயன்படுத்தாது, செயற்கை யொழிந்த காலத்திற்கு உபயோகித்தலே நன்று. கணக்கிலடங்கா(எண்ணிலடங்கா)த முறைகள் இரேசித்தால் உள்ளுடலுக்குள் அறிவு நிலைத்து, உணர்வு விளங்கும். |
| 45 | **மயிர்க்கால்வழி யெல்லா மாய்கின்றவாயு<br>வுயிர்ப்பின்றி யுள்ளே பதி .** |
| | மயிர்க்கால் = மயில் + கால்.<br><br>மயில் மாயயைக் குறிக்கும். மாயையின் வழியில் (கால்) உயிர்க் காற்றாகிய வாயு (உயிர்ப்பு) அழிந்து கொண்டு இருக்கின்றது. அதை முற்றிலும் முக்கலையும் ஒன்றுமிடத்தில் பதித்து நிலை நிறுத்திவிடு. |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 5 | **வாயு தாரணை ( 41 – 50 )** |
| 46 | **இரேசிப்பது போலப்பூரித்து நிற்கிற்<br>றராசுமுனை நாக்கதுவே யாம் .** |

கலைகளைப் பூரிக்கச் செய்யும் பூரகம் என்னும் தந்திரத்தில் (தன்+திறத்தில்) நின்றால், நுனி நாக்காகிய பிரணவ உச்சி நிறைகோலாயிருக்கும். பூரகம் பூரிப்புடையது. பூரிப்படைந்தால்தான் மேல்நோக்கும். மேல் நோக்கினால்தான், பிரணவத்தை உருவாக்க முடியும்.

## திருமந்திரம் :

"நாவின் நுனியில் நடுவே சிவிறிடில்
சீவனு மங்கே சிவனு முறைவிடம்
மூவரு முப்பத்து மூவருந் தோன்றுவர்
சாவது மில்லை சதகோடி யூனே."

சிவிறிடல் = விசிறியின் அடிப்பகுதி போல விரிந்து குவிதல்.
மூவர் = அயன், அரி, அரன்.
முப்பத்து மூவர் = பகலவர் பன்னிருவர், உருத்திரராம் முனிவர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர்.
சதம் = நூறு. ஊன் = உடல்.

நாக்கின் நுனியால் அண்ணமுகட்டில் உள்ள ஊசித்துளை வழியைத் துருத்தி போலக் குவித்து வைத்து அடைக்க உயிரும், உயிருக்குயிராம் சீவனாகிய சிவனும் ஒன்றுசேர்ந்து உறைவர். திருவடிகளால் காணுதலால் ஆவி மூன்று தெய்வங்களையும், முப்பத்து முக்கோடி தேவரையும் எளிதில் காணலாம். நூறுகோடி ஊழி வந்தாலும் உடலுக்கு அழிவில்லை.

"தீவினை யாடத் திகைத்தங் கிருந்தவர்
நாவினை நாடி நமனுக்கிட மில்லை
பாவினை நாடிப் பயனறக் கண்டவர்
தேவினை யாடிய தீங்கரும் பாமே."

தீவினையாட = தீய கருமங்களால்.
நாவினை நாடில் = நாவின் நுனியை அண்ணாக்கில் சிவிறிடில்(கேசரியோகம்).

பாவினை = திருமறைத் திருப்பாட்டை.
பயனற என்பதை அறபயனெனப் பொருள்கொள்ளல் வேண்டும். அஃதாவது, முழுப்பயனையும்.

தேவினை = நன்மை தரும் வினைகளால்.

பாவச் செயல்களைப் புரிந்தவர் பிறப்பு இறப்புக்கு உட்பட்டுத் திகைத்து இருப்பர். கேசரி யோகத்தை முறையாக ஞானாசிரியனிடம் கற்று, பயின்றுவர நீண்ட நாள் வாழ்வர். மறலியாம் எமனுக்கு அங்கே வேலையில்லை. செந்தமிழ் மறைப்பாட்டை ஆய்ந்து இடையறாது ஓதி அதன் முழுப் பயனையும் அடைந்தவர் சிவத்துடன் கூடிப் பேரின்பம் அடைவர்.

"ஊனூறல் பாயும் உயர்வரை உச்சிமேல்
வானூறல் பாயும் வகையறி வாரில்லை
வானூறல் பாயும் வகையறி வாளர்க்குத்
தேனூறல் உண்டு தெளியலு மாமே."

ஊறல் = இடையறா ஊற்றுடைய புனல். இதுவே ஆகாய கங்கை என உருவகிக்கப் பட்டது.
ஊனூறல் = விந்து.

வானூறல் = அமிழ்து.

தேனூறல் = அமிழ்தின் சுவை.

உயர்விடமாகிய உச்சியில் இருந்து விந்து கீழ்நோக்கி இறங்கும். அங்ஙனம் செல்லவிடாது வளிப்பயிற்சியால் உச்சித்துளைக்கு ஏற்றிட அதுவே அமிழ்தாய் மாறும்.

திருவருள் துணையால் இந்நிலை எய்தியோர்க்குத் தேனூறலாகிய திருவடி உணர்வாம் தெளிவு உண்டாகி இன்பம் கிட்டும்.
இறைவனின் முடிமேல் உள்ளவை: கங்கை, மதி, அரவு, கடுக்கை(கொன்றை). ஆக, கங்கை வானூறலாகவும், மதி ஊனூறலாகவும், அரவு குண்டலியாகவும், கடுக்கை தேனூறலாகவும் உருவகிக்கப் பட்டதென்பர்.

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 5 | **வாயு தாரணை ( 41 – 50 )** |
| 47 | **கும்பகத்தினுள்ளே குறித்தரனைத் தானோக்கிற்<br>றும்பிபோ னிற்குந் தொடர்ந்து .** |

தும்பி = கரும்பு (கோல்). தும்பி என்பதை வண்டு, யானை ஆகியவற்றோடு ஒத்து நோக்கில், நிறம், குணம், உருவம் ஆகியவைகள் பொருந்தாது. ஆகவே, தும்பி என்பதைக் கரும்பு என்றே எடுத்துக் கொள்ளல் வேண்டும்.

கரும்பு, வெள்ளை சிவப்பு கலந்திருப்பதால், வெள்ளையும் சிவப்பும் பிராணாபான வாயுவைக் காட்டுகிறது. வாயுவோ நாதபிந்து சாரமாயிருக்கிறது. குணமோ இனிப்பாகிய சுகத்தைத் தருகிறது. உருவமோ, நீண்டு உயர்ந்து இருக்கின்ற தன்மையும், அதன் இலைகள் இடை பிங்கலைக் கலைகளைக் குறிக்கும் தன்மையாலும் இங்கு, தும்பி என்பதற்குக் கரும்புகோல் என்றே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பர் மூத்தோர்.

கும்பகத்தில் நிலைத்தூன்றி நின்று சீவனை நோக்கில், ஆன்மாவானது கரும்புக்கோல் போல், நோக்கோடு மேல்நோக்கி நிற்கும்.

## திருமந்திரம் :

“தீங்கரும் பாகவே செய்தொழி லுள்ளவர்
ஆங்கரும் பாக அடையநா வேறிட்டுக்
கோங்கரும் பாகிய கோணை நிமிர்த்திட
ஊன்கரும் பாகியே ஊனீர் வருமே.”

கோங்கரும்பு = பாம்பின் தலை, குண்டலி.

கோணை = வளைவை. ஊனீர் = உடல் அமிழ்து.

கேசரி யோகப் பயிற்சியால் வெறுக்கத்தக்க உடலை விரும்பத் தகுந்த கரும்புபோல் ஆக்கிக் கொள்ள இயலும். பூவின் அரும்பு போன்ற நாவின் நுனியை மேல்நோக்கிக் குவித்துச் செலுத்திப் பாம்பின் தலைபோல உள்ள கோங்கரும்பை ஒத்த குண்டலியின் வளைவை நேராக்கினால் உடல் கரும்புபோல இனிமை உடையதாகும். ஊனீராம் மதிமண்டல அமிழ்தும் சுரக்கும்.

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 5 | **வாயு தாரணை ( 41 – 50 )** |
| 48 | இரேச கபூரக கும்பக மாற்றிற்<br>றராசு போனிற்குந் தலை . |
| | எண்சாண் உடலுக்கு தலையே பிரதானம்.<br>தலையில் முக்கியம் கண்களே.<br>அவைகள் சூரிய, சந்திரனாகும்.<br>சூரியனுக்குப் பன்னிரண்டு கலைகள்.<br>சந்திரனுக்கு பதினாறு கலைகள்.<br>இவ் வேறுபாடுகளினாலேயே, மனம் தடுமாறுகிறது.<br>இதைத் திருத்தவே, இரேசக, பூரக, கும்ப வழிகளை வகுத்தனர்.<br>இவ்வழிகளில், மாறிமாறிப் பயிற்சி செய்தால், பார்வையானது கலைகளுடைய குறைகளை நிறைவு செய்யும். அப்போது, தலை துலாக்கோல் போல் நிற்கும். |
| 49 | வாயு வழக்க மறிந்து செறிந் தடங்கி<br>லாயுட் பெருக்க முண்டாம் . |
| | பிராணபான வாயுக்களின் அசைவுகளை (சலனத்தை, ஓடும் வழி வகைகளை) அறிந்து, உணர்ந்து, அவைகளை ஒன்றுசேர்த்து (செறிந்து), உந்திக் கமலத்தில் நிலை நிறுத்தி, அடங்கினால், ஆயுள் பெருகும். |
| 50 | போகின்ற வாயு பொருந்திற் சிவமொக்குந்<br>தாழ்கின்ற வாயு வடக்கு . |
| | மேல்நோக்கிச் செல்லும் பிராணவாயுவுடன், கீழ்நோக்கிச் செல்லும் அபானவாயுவைக் கட்டுப்படுத்தி, மேல் நோக்கிச் செலுத்தி, இரண்டையும் ஒன்றாக்கினால், சிவத்தொடு ஒன்றலாம். |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 6 | **அங்கிதாரணை ( 51 – 60 )** |
| 51 | **அந்தத்தி லங்கி யழல் போலத் தானோக்கிற்**<br>**பந்தப் பிறப் பறுக்கலாம் .** |
| | சூரிய சந்திர கலைகளை அக்கினி கலையோடு கலந்து நோக்கில், அக்கினி (அங்கி)யான மூல அக்கினி சுவாலைபோல் கிளர்ந்து எழுந்து உச்சி நோக்கிப் பாயும்.<br><br>இப்பயிற்ச்சியைத் தொடர்ந்து செய்தால் (அந்தத்தில்) முடிவில் பிறப்பெடுக்கும் பந்தபாசங்களை அறுத்து விடலாம்.<br><br>“ஊதியறி வாய்கொண்டு ஊதிப்பாரு,<br>உள் பத்திக் கொண்டுதடா தானே தானாய்,<br>ஊதியறி வாயறிய மாட்டாயானால்<br>உன்னாணை ஊதிபங்க ளொன்றுமில்லை.”<br><br>“ஊதுகிற வூத்தறிந்தா லவனே சித்தன்” என்றும் சித்தர் நூல்கள் கூறுகின்றன. |
| 52 | **உள்ளும் புறம்பு மொருங்கக் கொழுவூரிற்**<br>**கள்ள மல மறுக்கலாம் .** |
| | தன் தலைக்கு (பிரணவ எல்லைக்கு)ள்ளும், வெளியேயும் ஒரே காலத்தில் உயிர்க் காற்று (பிராணனு)க்குப் பலத்தைக் கொடுக்கும் மூலாக்கினியை எழுப்பிக் கொடுத்துக் கொண்டிருந்தால் ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மலங்களை அறுக்கலாம்.<br><br>ஓங்காரத்துக்கு உள்ளும் புறமும் அக்கினியை எழுப்பி, அதன் கலைகளைப் பாய்ச்சினால் இறைத் தத்துவங்களை மறைத்துக் கொண்டிருக்கும் மாயையை ஒழிக்கலாம். |
| 53 | **எரியுங் கழல்போல வுள்ளூற நோக்கிற்**<br>**கரியுங் கனலுருவ மாம் .** |
| | முக்கலைகளையும் இணைத்து அக்கினியைக் கிளப்பி ஓங்காரத்துட் சென்று பார்த்தால் பிரம முடிச்சாகிய இருட்டுக்குள் ஒளி ஒளிரும்.<br><br>ஓங்காரம் = தலையினுள்ளே<br>பிரமமுடிச்சு = இருள், உண்ணாக்கின் மேல் உள்ள நரம்புக் கொத்தின் முடிச்சு. |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 6 | **அங்கிதாரணை ( 51 – 60 )** |
| 54 | **உள்ளங்கி தன்னை ஒருங்கக் கொழுவூறில்<br>வெள்ளங்கி தானாம் விரைந்து .** |
| | உள்ளங்கி = பிரணவத்திற்குள் பிரவேசித்த அக்கினியாக இருக்கும் நாதகலையை; வெள்ளங்கி = பிந்து கலை.<br><br>பிரணவத்திற்குள் நுழைந்த அக்கினியாயிருக்கும் நாத கலையை பூரணமாக மூலாக்கினியை எழுப்பி அதன் சுவாலையை நாத கலைமேல் பாய்ச்சினால் பிந்துகலை தானாகவே மேலே எழுந்து நிற்கும். |
| 55 | **உந்தியி னுள்ளே யொருங்கச் சுடர்பாய்ச்சி<br>லந்தி யழலுருவ மாம் .** |
| | மணிபூரகமாகிய உந்தியில் அக்கினி கலையை உட்புகச் செய்தால், இரவு, அழலாம் நெருப்புபோல் பிரகாசிக்கும்.<br><br>**திருமந்திரம் :**<br><br>“உந்திக்கமலத் துதித்தெழுஞ் சோதியை<br>யந்திக்கு மந்திரமாரு மறிகிலர்<br>அந்திக்கு மந்திரமாரு மறிந்தபின்<br>தந்தைக்குமுன்னே மகன் பிறந்தானே.”<br><br>அந்திக்க = வந்திக்க, வணங்க.<br><br>படைப்புக் களமாம் கொப்பூழில் தோன்றிச் சுடர்விட்டுக் கிளம்பும் ஒளிப்பிழம்பை வணங்கி வழிபடும் முறையினை யாரும் அறிகிலர். அதை அறிந்தால், தந்தையாகிய சிவத்திற்கு முன் ஆவியாகிய மகன் தோன்றுவான். “சிவயசிவ” எனும் திருவைந்தெழுத்தில் சிகரத்துக்கு முன் யகரம் நிற்கும் நிலையினையே தந்தைக்குமுன் மகன் பிறந்தான் என்பதைக் குறிக்கும். கொப்பூழுக்கு முன்னிடமாகிய மூலத்தில் ஓம் மொழிப் பிள்ளையார் தோன்றியதைக் கூறுதலும் ஒன்று. |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 6 | **அங்கிதாரணை ( 51 – 60 )** |
| 56 | **ஐயைந்து மாய வகத்துளெரி நோக்கிற்<br>பொய்யைந்தும் போகும் புறம் .** |
| | அரசனாகிய பிரணவமும், ஐம்புலச் சக்திகளும் சேரும்படி பிராண நடு வீட்டில் அக்கினியை எழுப்பி மேல்நோக்கின் பலனற்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்தும் உடலை விட்டுப் புறத்தே சென்றுவிடும். |
| 57 | **ஐம்பது மொன்றுமழல் போலத்தா னோக்கி<br>லும்ப ரொளியாய் விடும் .** |
| | (ஐம்பது+ஒன்று) ஐம்பத்தியொரு பீசங்கள் இருக்கும் இடத்தை முக்கலையொன்றி அக்கினியால் பார்க்குங்கால் உடல் தேவர்களுடைய உடலைப் போல் ஒளி வீசும்.<br><br>**திருமூலர் :**<br><br>"ஓதும் எழுத்தோ டுயிர்க்கலை மூவைந்தும்<br>ஆதி எழுத்தவை ஐம்பதோ டொன்றென்பர்<br>சோதி எழுத்தின் நிலையிரு மூன்றுள<br>நாத எழுத்திட்டு நாடிக்கொள்ளீரே."<br><br>**சோதி எழுத்து = நாதவெழுத்து = சிகாரம்.**<br><br>மந்திரங்களுக்கெல்லாம் முதலில் ஓதப்பெறும் ஓங்காரத்துடன் மற்ற பதினைந்து உயிர் எழுத்துக்களையும் கூட்ட மொத்த உயிரெழுத்து பதினாறு. மெய்யெழுத்து முப்பத்தி ஐந்து. ஆக மொத்தம் 16 = 35 = 51.(செந்தமிழ்க் காலத்துக்கு முந்திய நிலை இஃதாம்.)<br>சோதி எழுத்து சிகாரம்.<br>உடல் அகத்தே உள்ள ஆதார நிலைகள் ஆறு.<br>இந்நிலைக் களங்களில் பரவெளி எழுத்தாகிய ஓம் என ஒலித்து உணர்க. |
| 58 | **தூண்டும் சுடரைத் துளங்காமற் றானோக்கில்<br>வேண்டுங் குறை முடிக்கலாம் .** |
| | முக்கலையொன்றி மூலாக்கினியை அசைவில்லாமல் (துளங்காமல்) பார்க்குங்கால் வேண்டிய குறைகளாகிய பிறப்பறுத்தல் முதலிய ஆன்ம இச்சைகளை சித்திக்க வைத்துக் கொள்ளலாம். |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 6 | **அங்கிதாரணை ( 51 – 60 )** |
| 59 | **உள்ளத்தாலங்கி யொருங்கக் கொழுவூறில்<br>மெள்ளத்தான் வீடாம் விரைந்து .** |
| | முக்கலையை ஒன்றுதலால் ஏற்படும் அக்கினியாலான கலைச்சுடரைப் பிரணவ வீட்டினுள்ளே பாய்ச்சினால் ஞான எண்ணங்கள் விரைவில் கைவரும் (சித்தி கிட்டும்). |
| 60 | **ஒள்ளிதா யுள்ள சுடரை யுறநோக்கில்<br>வெள்ளியா மாலை விளக்கு .** |
| | மனமும், பார்வையும் ஒன்றுகூடி மூலாக்கினியைப் பார்ப்பதால், பிந்து கலை , இருளையற்றிப் பகலைப்போல் தோற்றுவிக்கும் .<br>இவ்வந்தரங்க இரகசியத்தைத் **திருவாசகத்தில் :**<br>"ஈண்டியமாயா விருள் கெடவப்பொருளும் விளங்கத்<br>தூண்டிய சோதியை மீனவனுஞ் சொல்லவல்லனல்லன்<br>வேண்டியபோதே விலக்கிலை வாய்தல் விரும்புமிறாள்<br>பாண்டியனாரருள் செய்கின்ற முத்திப் பரிசிதுவே."<br>இப்பாடலில், மீனவன், பாண்டியன், பரமசிவன், மன்மதன் ஆகியோருக்கென அமைப்பதைத் தவிர்த்து, வெள்ளியாகிய பிந்து கலைக்குப் பொருத்தினால் ஞானக் கருத்துகள் விளங்கும்.<br>(இப் பூட்டை உடைத்துத் திறப்பதற்கு குரு(ஞானாசிரியன்) உத்திரவு இல்லை. ஆதலால் இத்துடன் விட்டோம்.) |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 7 | **அமுத தாரணை ( 61 – 70 )** |
| 61 | **அண்ணாக்குத் தன்னையடைத் தங்கமிர் துண்ணில்<br>விண்ணோர்க்கு வேந்தனு மாம் .** |

இப்பத்துக் குறளிலும் நம் உடலில் அமுதம் சுரக்கும் இடத்தைக் குறித்தே எழுதி வைத்துள்ளார்கள்.

**ஐந்து இடங்களில் அமுதம் சுரக்கும் :**

**அமுதம் -** நாவின் நுனி:- பக்குவ ஞானத்தால், சிருட்டி வல்லப நினைவால் – இனிப்புள்ள ஊற்று நீர்

**புவனாமுதம் -** நாவின் நடுவில்: பக்குவ கிரியையாலும் ஞானநிலை நினைவின் உணர்வாலும் – இளகின இனிப்பான சக்கரைப் பாகு.

**மண்டலாமுதம் –** நாவின் அடியில்: பக்குவ இச்சை, சம்மர உணர்வின் தன்மையாலும் – குழம்பிய சக்கரைப் பாகு.

**ரகசியாமுதம் -** உள்நாவினடியில்: முதிர்ந்த சக்கரைப் பாகு.

**மவு (மௌ) னாமுதம் -** உண்ணாக்குக்கு மேல்: பக்குவ அருள்(அனுக்கிரகம்). சுபாவத்தின் அனுபவம் – துரியநிலை – வெகு இனிப்புள்ள குளிர்ந்த மணிக்கட்டி.

**அண்ட அமுதம் -** அக அமுதம், அகப்புற அமுதம்,புற அமுதம், புறப்புற அமுதம் (மழை)

**பிண்டஅமுதம்: -** அக அமுதம், அகப்புற அமுதம், புற அமுதம், புறப்புற அமுதம் (வியர்வை).

மனத்தையும், நோக்கையும் (பார்வை) ஒருமுகப்படுத்தி ஓங்காரத்தினுச்சியில் உள்ள நாக்கின் மத்தியிலே நிலைத்து நிற்க அமுதம் சுரக்கும். அதை உண்டு விட்டால் விண்ணோர்களுக்கு வேந்தனாகலாம்.

**மணிவாசகப்பெருமான்: :**

"மாயவாழ்க்கையைமெய்யென்றெண்ணி மதித்திடாவகை நல்கின்
வேயதோளுமை பங்கனெங்கடிருப்பெருந் துறை மேவினான் காயத்துள்ள
முதூறவூரநீ கண்டுகொள் ளென்று காட்டிய சேயமாமலர் சேவடிக் கணஞ்
சென்னி மன்னித் திகழுமே."

**தாயுமானவர் :**

“மர்மர்ச் சோலைநெறி நன்னீழன் மலையாதி மன்னுமுனிவர்க் கேவலாய்
மந்திரமாலிகை சொல்லுமியம நியமாதியா மார்க்கத்தி நின்றுகொண்டு
கருவுருகாயத்தை நிர்மலமதாகவே கமலாச னாதி சேர்த்துக்
காலைப்பிடித்தனலை யும்மைகுண்டலியடிக் கலைமதி னூடுதாக்கி
உருகிவருமமுர் தத்தை யுண்டுறங்காமல் உணர்வான விழியைநாடி
ஒன்றோடி ரண்டெனாச் சமரசசொரூபசுக முற்றிடவென் மனதின் வண்ணம்
திருவருள்முடிகவித் தேகமொடு காண்பனோ தேடரிய சத்தாகியென்
சித்தமிசைக் குடிகொண்ட வறிவான தெய்வமே தேசோ மயாநந்தமே.”

| | |
|---|---|
| 62 | ***ஈரெண் கலையி னிறைந்தவமிர் துண்ணில் பூரண மாகும் பொலிந்து .*** |
| | பதினாறு கலைகளுடைய (தூலத்தில் திருமால்) சந்திரனிடம் நிறைந்துள்ள அமிர்தத்தை உண்டதேகம் பொலிந்து ஒளி வீசும். |
| 63 | ***ஓங்காரமான கலசத்தமிர் துண்ணில் போங்காலமில்லை புரிந்து .*** |
| | ஞானவினையினால் (முக்கலையொன்றித்தல்) பிரணவ உருவாகிய கபாலக் குகையில் உள்ள கலசத்திலிருந்து அமிர்தமுண்ணில் மரணமில்லை. இதைச் சாகாக் கலையென்பர். |
| 64 | ***ஆனகலசத் தமிர்தை யறிந்துண்ணில் போனகம் வேண்டாமற் போம் .*** |

போனகம் = உணவு = போசனம் =ஆகாரம்

எட்டடுக்குக் கமலத்தினடுவில் உள்ள அமுதத்தைக் கண்டு உண்டால் உணவின் தேட்டை இல்லை.

**திருமூலர் :**

“ஆறேயருவி யகங்குள மொன்றுண்டு
நூறேசிவகதி னுண்ணிது வண்ணமுங்
கூறேகுவிமுலைக் கொம்பனை யாளொடும்
வேறேயிருக்கும் விழுப்பொருள் தா(னன்றே)னே.”

ஆறேஅருவி = சிவநெறியே அமுதப் பெருக்கு.

அகம் = உள்ளம், நூறே சிவகதி = அளவிலா ஆனந்தம்.
கூறே = பாகத்தில் உள்ள.

உடலில் அமுதப் பெருக்காகிய அருவி ஒன்றுண்டு. அது சேருமிடம் நெஞ்சக்குளமாம். அங்கு திகழ்வது அளவிலாச் சிவநிலையாம். ஆங்கே குவிந்தமுலையுடைய அம்மையை கூறாகக் கொண்டு அப்பன் வீற்றுள்ளான். அவனே விழுப்பொருள்.

"ஊறு மருவி யுயர்வரை யுச்சிமேல்
ஆறின்றிப் பாயும் அருங்குள மொன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்
பூவின்றிச் சூடான் புரிசடை யோனன்றே."

உயர்வரை உச்சி = உச்சியில் உள்ள ஆஞ்ஞை.
பாயும் = நீர் நிரம்பும்.
தாமரை = சகசிர அறையெனப்படும் ஆணையிடம் என்பர்.

உடலின் உச்சியிடமாம் தலைக்குள் ஆற்றுநீர் ஓடி நிரம்பாத அருட்குளம் ஒன்று உண்டு. அதுவும் சேறில்லாத குளம். அதிலே பூத்த செழுங்கொடித் தாமரையை மட்டுமே புரிசடையோன் சூடிக் கொள்வான். தலையில் நீர் நிரம்பிய சேறற்ற குளம் கண்ணாகிய திருவடியே. அதன் வழியாகப் பூக்கும் அருள் தாமரையை மட்டும்தான் சிவன் சூடிக் கொள்வான்.

"ஒருங்கிய பூவுமோ ரெட்டித ழாகும்
மருங்கிய மயாபுரிய தனுள்ளே
சுருங்கிய தண்டின் சுழினையினூடே
யொருங்கிய சோதியையோர்ந் தெழுமுய்ந்தே."

ஒருங்கிய = சேர்ந்துள்ள. மருங்கிய = பெருமையுடைய .
மாயாபுரி = உடல்.
தண்டு = முதுகுத் தண்டு எலும்பு, வீணாத்தண்டு.
எட்டிதழ்த் தாமரை = நெஞ்சத் தாமரை.

பெருமைமிக்க மாயாபுரி என்னும் இவ்வுடலில் உள்ள முதுகு எலும்புக்குள் ஓடும் நுண்ணிய சுழுமுனை நாடியை அகத்தவத்தால் எழுப்புங்கள். அதுவே உயிர் உய்ய வழியாம்.

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 7 | **அமுத தாரணை ( 61 – 70 )** |
| 65 | **ஊறுமமிர்தத்தை யுண்டியுறப் பார்க்கில்<br>கூறும் பிறப்பறுக்க லாம் .** |
| | சிவக் கருவூலமாகிய பிரணவவுச்சியை அகத்தவத்தில் கண்டபடி பார்க்க ஊறிவரும் அமுதத்தை உண்ண நூல்களில் கூறப்பட்டுள்ள (எண்ணப்)பிறப்பைத் தவிர்க்கலாம் (அறுக்கலாம், முக்தியடைந்தால்) |
| 66 | **ஞான வொளிவிளக்கா னல்லவமிர் துண்ணில்<br>ஆன சிவ யோகி யாம் .** |
| | ஈங்கு, சிவராசயோகி யார்? என்பதிற்கு இலக்கணங் கூறப்பட்டு உள்ளது. ஆன்ம ஒளியினாலுண்டாகும் அமுதம் உண்ணில் அங்ஙனமுண்டவனே சிவராச யோகியாவான். |
| 67 | **மேலையமிர்தை விளங்காமற்றா னுண்ணில்<br>காலனை வஞ்சிக்க லாம் .** |
| | பேரண்டப் பெருவெளியிலிருந்து சூரியகலையிலிருந்து கீழே இறங்கும் அமுதத்தை ஐம்பூதங்களின் பரிசத்திற்கு இடம் கொடாமல் (விளங்காமல்) உண்டால் ***எமனை ஏமாற்றலாம் . மரணத்தைத் தள்ளிப்போடலாம் .***<br><br>“பிராம்மண கர்மாவில் வேதசம்பந்தமானது, சூரியனிடத்தே இருந்து மூன்று உளுந்து அளவு நீரை வரவழைத்து, சுவீகரிக்க வேண்டும்” என வேதாந்தம் கூறுகிறது.<br><br>இங்கு விளங்காமல் என்பதற்கு இன்னுமொரு விளக்கம்:<br><br>சூரியகலையிலிருந்து வருவதால் வந்தவுடன் ஆவியாகி விடும் என்றும் அதை உடனே காலதாமதம் செய்யாமல் உண்ண வேண்டும் என்றும் கூறப்படுகிறது. |
| 68 | **காலன வூக்கங் கலந்த வமிர்துண்ணில்<br>ஞான மதுவா நயந்து .** |
| | ஊக்கம் = பிரணவ உச்சி.<br><br>பிரணவ உச்சியில் பிராணபான வாயுக்களோடு ஆன்ம அக்கினியும் கலந்ததாலுண்டாகும் அமுதத்தை உண்டால் அதன் வலிமையால் ஞானமுண்டாகும். |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 7 | **அமுத தாரணை ( 61 – 70 )** |
| 69 | எல்லையி லின்னமிர்த முண்டாங் கினிதிருக்கில்<br>தொல்லை முதலொளியே யாம் . |
| | பிரணவ உச்சியில் அமுதத்தையுண்டு இனிதாக இருந்தக்கால் பழமையாகிய (தொல்லை) ஆதி வொளியாம்; ஆன்ம ஒளியே ஆகும். |
| 70 | நிலாமண்டபத்தி னிறைந்த வமிர்துண்ணில்<br>உலாவலா மந்தரத்தின் மேல் . |
| | சந்திர மண்டபத்திலிருக்கும் அமுதுண்டால் அறிவு உடலில் (சிதாகாயத்தில் = சிதா+காயம் = பரவெளி) உலாவரலாம் (ஆகாயசஞ்சாரம் என்பது வேறு) |

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 8 | **அர்ச்சனை ( 71 – 80 )** |
| | (அருச்சனை = பூசிக்கும் முறை = கலைகளைப் பிரகாசம் பெற வைப்பதே. இதை அருட்சுனை என்றும் ஞானியர் கூறுவர்.) |
| 71 | மண்டலங்கள் மூன்று மருவவுட நிறுத்தி<br>அண்டரனை யர்ச்சிக்கு மாறு . |
| | அண்டரனை = கண்ணுக்குள் இருக்கும் சிவனாகிய சீவனை.<br>சூரிய, சந்திர, தீ மண்டலங்களை ஒருங்கிணைத்துத் (முக்கலையையும் ஒன்று சேர்த்து) தான் கண்ணுக்குள் இருக்கும் சிவனாகிய சீவனை அருச்சிக்கமுடியும். |
| 72 | ஆசனத்தைக் கட்டியரன் றன்னை யர்ச்சித்து<br>பூசனைசெய் துள்ளே புணர் . |
| | ஆன்மா இருக்குமிடத்தை கட்டி உடலுக்குள்ளே முக்கலையையும் ஒன்று சேர்க்கும் (புணரும்) அகத்தவத்தைச் செய்து அரனையருச்சித்து பூசை செய். |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 8 | **அர்ச்சனை ( 71 – 80 )** |
| 73 | **உள்ளமே பீடமுணர்வே சிவலிங்கத்**<br>**தெள்ளிய ரர்ச்சிக்கு மாறு .** |
| | மனத்தையே பீடமாகவும், அறிவின் தெளிவாகிய உணர்வையே சிவலிங்கமாகவும் உணர்ந்து, தெள்ளிய அறிவையுடைய ஞானியர் பூசை செய்யும் முறையாகும். |
| 74 | **ஆதாரத்துள்ளே யறிந்து சிவனுருவைப்**<br>**பேதமற வர்ச்சிக்கு மாறு .** |
| | மூலாதாரத்துள்ளே சீவனிருக்குமிடம் அறிந்து, ஐம்பூதங்களின் வினைகளால் பேதமேதும் வராது அருச்சிக்கவேண்டும். |
| 75 | **பூரித்திருந்து புணர்ந்து சிவனுருவைப்**<br>**பாரித்தங் கர்ச்சிக்கு மாறு .** |
| | ரேசக, கும்ப, பூரக வினைகளினால் ஓங்கார உச்சியாம் கருத்தினில் வெளிப்பட்ட சீவனின் உருவை, கருத்திலேயே அசையாது வைத்து நிறுத்தி அருச்சனை செய்.<br><br>இங்கு சீவனின் உருவைக் காண இயலாது. உயிர்க்காற்றின் ஓட்டத்தைமட்டுமே உணர இயலும். அதுவே சீவனின் உரு. |
| 76 | **விளக்குறு சிந்தையான் மெய்ப்பொருளைக் கண்டு**<br>**துளக்கற வர்ச்சிக்கு மாறு .** |
| | யோகப் பயிற்சியால் தெளிவுற்று அசைவற்ற களங்கமற்ற மனத்துடன் அசைவற்ற கண்களால் உடலிலுள்ள (இரு+உதய) இருதய குகையிலுள்ள சீவனைக் கண்டு அருச்சனை செய்வதே சாலச் சிறந்த வழி. |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 8 | **அர்ச்சனை ( 71 – 80 )** |
| 77 | **பிண்டத்திநுள்ளே பேரா திறைவனைக்<br>கண்டுதா னர்ச்சிக்கு மாறு .** |

கபாலக்குகையில் உள்ள கண்களுக்குள்ளே (பிண்டதினுள்ளே) உள்ள சீவனைக் கண்டு அசையவிடாது கட்டி அதனுள் நிலைத்துப் பூசிப்பதே சிறந்த வழி. சிவமாகிய சீவன் தோன்றி மறையும் குணமுள்ளவன் என்பதால், அசையவிடாது கட்ட வேண்டுமென்பதை “பேராதிறைவனை” என்றார்.

**திருமூலர் :**

“ஒண்ணா நயனத்திலுற்ற வொளி தன்னை
கண்ணாரப் பார்த்து கலந்தங் கிருந்திடில்
விண்ணாறு வந்து வெளிகண்டிட வோடிப்
பண்ணாம நின்றது பார்க்கலுமாமே.”

ஒண்ணா நயனம் = ஞானக் கண்.

விண்ணாறு = ஆநந்தக் கண்ணீர்.
பண்ணாமல் நின்றது = தானாகிய தூய சிவம்.
பார்க்கலும் = உணர்த்த உணர்ந்து வழிபடுதல்.

புருவ நடுவினை ஊசிப்பார்வையால் உற்று நோக்கி, முக்கலைகளையும் கலந்து நினைவினில் நிற்க, யோக ஊற்று திறந்து யோகக் கண்ணீராம் ஆநந்தக் கண்ணீர் வெளி வந்து ஓடும். மெய்யுணர்வு வெளிப்படும். தூய சிவமாகிய சீவனைக் கண்டு வழிபட இயலும்.

“புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின் மலமாக்கி(நிர்மலமாக்கி)
லுறுப்புச் சிவக்கும் ரோமங் கறுக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடையோனே.”

நெறிப்பட = முறைப்படி.

உள்ளிருந்து வெளிவந்து மீண்டும் உள்ளே சென்று ஊடாடித் திரியும் உயிர்ப்பை மூச்சுப் பயிற்சியால் தடுத்து உள்நிறுத்தி, அருளால் தூய்மையாக்கி வாழவல்லார்க்கு உடல் பொன்மேனியாகும். உயிருக்கு

| | |
|---|---|
| | உயிராய் உடலில் நின்றாடும். பின்னல் சடைப் பெம்மானும் நிலைபெற்று நிற்பன். நிலைபெற்று நிற்பதால் உயிர் அழியாது; உடலும் அழியாது.<br>ஔவை கூறிய பிண்டமும், நெறிப்பட வுள்ளே எனத் திருமூலர் கூறியதும் பிரிவைக் காட்டும் இரு கண்களே. இதைவிடத் தெளிவாகப் பிரும்ம இரகசியத்தை வெளிப்படுத்த இயலாது.<br>**மாணிக்கவாசகப் பெம்மான் :**<br>“சிந்தனை நின்றனக்காக்கி நாயினேன்றன் கண்ணினைநின் திருப்பாதப் -----போதுக்காக்கி<br>வந்தனையு மமலர்க்கே யாக்கிவாக்குள்(ஆதத்துடைய – சூரத்துள்) -----மணிவார்த்தைக் காக்கியும் புலன்களார<br>வந்தனை யாடகொண்டுள்ளே புகுந்த விச்சை மாலமுதப் பெருங்கடலே -----மலையேயுன்னைத்<br>தந்தனை செந்தாமரைக் காடனையமேனித் தனிச் சுடரே யிரண்டுமிலிதனிய -----னேற்க்கே.”<br>ஈண்டு, இரண்டுமிலை யென்பதை இம்மெய், மறுமெய் எனவும், தூல சூக்குமமெனவும் கொள்ளலாமென்பர் ஆன்றோர். |
| 78 | **மந்திரங்களெல்லா மயங்காம லுண்ணினைந்து முந்தரனை யர்ச்சிக்கு மாறு .** |
| | “எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்” என்பதற்கிணங்க, எழுத்தாகிய மன்+திறங்களையும், எண்ணாகிய எண்ணிக்கையையும் ஓதி உணர்ந்து, அண்டத்தில் உள்ளவற்றில் கருத்தை செலுத்தாது, பிண்டத்தில் அந்த மந்திரங்களின் பொருளுணர்ந்து அகத்தவத்தால் அருச்சிக்க சிவமாகிய சீவன் வெளிப்படும். |
| 79 | **பேராக்கருத்தினாற் பிண்டத்தி னுண்ணினைந் தாராதனை செய்யு மாறு .** |
| | **வெட்டாத சக்கரமாம் பிரிவுபட்ட கண்களினால்** கபாலக் குகையினுள்ளே அசைவற்ற மனத்தையும், நினைவையும் ஒன்றாகக் கருத்தில் கலந்து அகத்தவம் செய்தலே பிறப்பறுக்கும் வழி. |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | வீட்டுநெறிப்பால் |
| 8 | அர்ச்சனை ( 71 – 80 ) |
| 80 | உள்ளத்தினுள்ளே யுறப்பார்த்தங் கொண் சுடரை<br>யுள்ளத்தா னர்ச்சிக்கு மாறு . |

அசைவற்ற நினைவினால், கருத்தையொருமித்து (கண்பொருந்தி) பிண்டத்தில் உள்ளே நினைவைச் செலுத்தி அகத்தவம் செய்ய சீவமாகிய ஒளிச்சுடர் ஒளிவீசிக் கிளர்த்தெழும். அவ்விடத்தே ஞானவினையால் அருச்சனை செய்தலே ஆன்மவழியாம்.

கீழ்க்கண்ட பாடல்களையும் கருத்தில் கொண்டால் இரகசிய இடமும், தன்+திறமும் தெரியவரும் :

## திருமூலர் :

"நாவியின் கீழது நல்ல எழுத்தொன்று
பாவிக ளகத்தின் பயனறி வாரில்லை
ஓவிய ராலும் அறியவொண் ணாதது
தேவியுந் தானுந் திகழ்ந்திருந் தானே."
நாவி = நாபி; கொப்பூழ்.

பாவிகள் = தீவினையாளர்.
ஓவியர் = படைப்போன் முதலிய தேவர்.

கொப்பூழின்கீழ் மூலத்தே திகழும் ஒரு நல்ல எழுத்து ஓங்காரம். சிவசிவ எனச் சொல்லாத தீவினையாளர் இதன் பயனை அறியார். படைப்போன் முதலிய தேவர்களாலும் அறிதல் அரிது. அம்மையொடு அப்பனும் ஆங்கே திகழ்கிறான்.

"நீரில் எழுத்திவ் வுலக றறிவது
வானில் எழுத்தொன்று கண்டறி வாரில்லை
யாரிவ் வெழுத்தை அறிவா ரவர்கள்
ஊனில் எழுத்தை உணர்கிலர் தாமே."

நீரில் எழுத்து = நிலையற்றது. அறிவது = பலுக்குவது.

வானில் எழுத்து = பிரணவம்.

பிறப்பதற்கே தொழிலாகி இறக்கும் உலக உயிர்கள் நீர்மேல் எழுத்துப்போல் நிலையற்ற பொருள்களையே உணர்வர். திருச்சிற்றம்பலமாகிய பரவெளியில் ஒலிக்கும் ஓங்கார நிலை எழுத்தை உள்ளபடி பலுக்கி உணர்வாரில்லை. இவ்வோங்காரத்தை உணரவல்ல அடியார்கள் தலையெழுத்தாம் ஊழை உள்ளத்தில் உணரார்.

“அகார வுகார சிகார நடுவாய்
வகார மோடாறும் வளியுடன் கூடிச்
சிகார முடனே சிவன் சிந்தை செய்ய
ஒகார முதல்வ னுவந்து நின்றானே.”

அகரமோடாறும் = பிரணவத்தோடு கூடிய சிவமந்திரமாம் “சிவயநம” (ஓம்நமசிவய = சடாக்கரம்).

அகர உகரம் ஓங்காரத்தைக் குறிக்கிறது. சிகர வகரம் திருவைந்தெழுத்தாம் “நமசிவய”வைக் குறிக்கிறது. இவையிரண்டுமே ஆறெழுத்து மந்திரம். “சிவ சிவ” என இடைவிடாது உயிர்ப்புடன் எண்ணிக் காலை(காற்றை)ப் பிடிக்கும் கணக்கை அறிந்து வளிப்பயிற்சி செய்தால் ஓங்கார முதலாம் சிவன் தோன்றுவான்.

“அவ்வென்ற போதினி லுவ்வெழுத் தாலித்தா
லுவ்வென்ற முத்தி யுருகிக் கலந்திடு
மவ்வென்ற னுள்ளே வழிபட்ட நந்தியை
யெவ்வணஞ் சொல்லுகே னெந்தை யியற்கையே.”

உவ் = நடு இடம்.

அகரத்துடன் உகரத்தையும் சேர்த்து உடலினுள்ளே ஒலித்து (நடுக்குறிப்பாம் “உவ்”) அக்கினி கலையை மற்ற கலைகளுடன் கலந்தால் வீடு பேறு அடையலாம். “மவ்” எனும் மனத்தினிலே விளங்கும் நந்தியாகிய சிவம் முன்னின்று வழிப்படுத்தும். எந்தை சிவபெருமான் அருளுவதை எங்ஙனம் இயம்புவேன்.

“அவ்வொடு சவ்வென் றரனுற்ற மந்திரம்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிகிலர்
அவ்வொடு சவ்வென்ற தாரும் அறிந்தபின்
அவ்வொடு சவ்வும் அனாதியு மாமே.”

அகரமும் சகரமும் அரனுக்குறிய மந்திரமாம். அகரத்துடன் கூடிய சகரமாகிய “ச” என்னும் மறையினை எல்லோரும் அறிந்தபின், அகர சகரங்கள் அநாதியாகிய தொன்மை உடையதாம். மகரத்துடன் கூடிய சகரம் = சம். அதாவது “அசம்”. இதுவே அசபை ஆயிற்று. ***அசபை எனில் தவத்தில் ஒலிக்கப்படாதது .***

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 9 | **உள்ளுணர்வு ( 81 – 90 )** |
| | உள்ளுணர்வாவது அறிவாகிய ஓங்காரத்தின் சக்தியைக்கொண்டு யாவற்றையும் அறியும் தன்மை. |
| 81 | **எண்ணிலியூழி தவஞ் செய்திங் கீசனை<br>உண்ணிலைமை பெற்ற துணர்வு .** |
| | கணக்கற்ற முறை அசைவற்ற தன்மையை உண்டாக்கித் தவமியற்ற, அசைவற்ற நிலைமை ஏற்படுமிடமாகிய இருதயகமலத்தில், சிவத்தை நிலைபெற்ற தன்மையுடன் அடைந்ததே அறிவின் சக்தியாம்.<br><br>ஆக, தவத்தின் மூலமாய் அசைவையொழித்து, சிவத்தை இருதயகமலத்தில் நிறுத்த அறிவுக்கு அளவற்ற சக்தியுண்டாம்.<br><br>ஊழி என்பது ஐம்பூதங்கள் மறையுங்காலம். ஐம்பூதத்தின் சூக்குமமாகிய உடலுக்கு ஊழிக்காலம் மரணம். ஞான வினைக்கு ஊழிக்காலம் மனம் அழிதலாம். உணர்வென்பது அறிவின் சக்தியை அறிவின் வழியில் பயன்படுத்தலே யாம்.<br>*வாசிட்டம்:*<br>"தெரி பொருளுந் தரிசனமுஞ் சேரும் போதில் சேர்ந்த சுகமறிவு மிகச் சிறந்ததாகும்." எனவும்,<br>"உள்ளும் புறமும் அசைவின்றி உயிர்மன்னு மடங்குமெனிற், றள்ளூறாமலொருக் காலுந் தாதுவெல்லாஞ் சடத்துறையும்" என்றும்<br>*வாசிட்டம் - புசுண்டர் கதையில்:*<br>"இனையயாரு மிந்தவறிவு யிறவா திருக்க வீதறிய, வினயமின்றி மிகச்சேர்ந்தார் வீணர் செருக்குமிகுமுரப்பு, முனையில் வின்னா ணோசையைப் போன்மூடர் - கேட்பதிறப்பதற்கே, யனையர் வீணாட் கழிப்பதலா லறியா வறிவையறியாரே."<br>எனவும் கூறியிருத்தல் காண்க. |
| 82 | **பல்லூழி காலம் பயின்றனை யர்ச்சித்து<br>நல்லுணர்வு பெற்ற நலம் .** |
| | நன்மையைக் கொடுக்கும் அறிவானது அடைந்த நன்மை, பல முறைகளாக அசைவற்ற மனத்துடன் சிவத்தை அருச்சித்து சிவவொளியை அடைவதே. |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 9 | **உள்ளுணர்வு ( 81 – 90 )** |
| 83 | **எண்ணற்கரிய வருந்தவத்தா லன்றே**<br>**நண்ணப் படுமுணர்வு தான் .** |
| | உணர்வாகிய அறிவானது அகத்தவத்தினாலல்லாது வேறு விதத்தால் முழுமையடையாது. |
| 84 | **முன்னைப் பிறப்பின் முயன்ற தவத்தினால்**<br>**பின்னைப் பெறுமுணர்வு தான்.** |
| | பிறப்பு - உடல்<br>முன்னர் முயன்று தவத்தால் ஏற்றிய அகத் தீயால்தான் உணர்வாகிய அறிவு பூரணம் பெறும். அதாவது, முதலில் தவத்தைச் செய்து அதனாலுண்டாகிய சக்தியை உணர்வாகிய அறிவு அடையும்.<br>‘முன்னை‘, ‘பின்னை‘ என்பதை முன்சென்மம், பின்சென்மம் என்று எடுத்துக் கொள்வதற்கில்லை. இத் தேகமெடுத்து என்ன பயன்? இதிலுள்ள அறிவின் கதியென்ன?<br>**வாசிட்டம் சனகனின் கதையில் :**<br>“சங்கற்ப நாசத்தா லெளிதாக மனநாசந்தானே யெய்து, மங்குற்ற மனமிறக்கிற் சனன மரணங்களெனுமரமுமாயு, மிங்கிப்பா லெனைத் திருடுங் கள்வனை கண்டேன் கண்டேனிவன்பேர் நெஞ்சம், பொங்குற்ற நெஞ்சத்தா னெடுநா ளொந்தே னின்று பொன்று விப்பேன்”<br>இதைப் புரிய மருமமுடிச்சவிழும். |
| 85 | **காயக்கிலேச முணர்ந்த பயனன்றே**<br>**ஓயா வுணர்வு பெறல் .** |
| | காயக்கிலேசம் - மரணபயம்<br>உடல் ஒரு நாள் அழிவுறும் என உணர்ந்ததன் பயன், இடைவிடாத அகத்தவத்தால் அறிவுக்குள் உணர்வை அடைவதே. |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 9 | **உள்ளுணர்வு ( 81 – 90 )** |
| 86 | பண்டைப் பிறவிப் பயனாந் தவத்தினால்<br>கண்டங் குணர்வு பெறல் . |
| | பிறவி - மூலவித்து<br>எழுபிறவியின் வித்தாலேயே தவம் முடியுமென்பது அறிவாகிய உணர்வு பெறுதலே.<br><br>**எழுபிறவி :**<br><br>1.ஐம்பூதங்கள்<br>2.அவைகளின் கூட்டுறவால் உண்டான சக்திகள்<br>3.அச்சத்திகளை பிரிதிவிசத்தி உள்வாங்கி பழம், மருந்துப் பொருள்கள் முதலியன காய்க்கும் மரங்களை(ஓஷதிகளை) வெளிப்படுத்தல்<br>4.ஓஷதிகளிலிருந்து வித்தாகிய சீவவுணவுகளை உண்டாக்கல்<br>5.உணவையுண்டு நாதபிந்துக்களை உண்டாக்கல்<br>6.நாதபிந்துக்களால் இனப்பெருக்கம் செய்தல்<br>7.மறுபடி மனித உருவாய் வெளிப்பட்டு நிற்றல் |
| 87 | பேராத் தவத்தின் பயனாம் பிறப்பின்மை<br>ஆராய்ந் துணர்வு பெறின் . |
| | ஆராய்வின் மூலமாக உணர்வாகிய அறிவை பெற்றால், இடைவிடா ஞானசாதனைகளின் பயனாகிய பிறப்பின்மையை அடையலாம். (பிறப்பு என்பது எண்ணப் பிறப்பு) |
| 88 | ஞானத்தாலாய வுடம்பின் பயனன்றே<br>மோனத்தா லாய வுணர்வு . |
| | ஞானசாதனைகளினால் உண்டாகும் ஞானவுடலின் பயன், மவுனத்தால் கிடைக்கும் உணர்வை அடைவதே.<br><br>**“ மோனமென்பது ஞான வரம்பு ”** |

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 9 | **உள்ளுணர்வு ( 81 – 90 )** |
| 89 | ஆதியோடொன்று மறிவைப் பெறுவதுதான்<br>நீதியாற் செய்த தவம் . |
| | ஆதியோடு - சிவகலையோடு<br>அறிவாகிய ஓங்காரத்தில் சிவகலையைச் சேர்த்தலே அரிய தவமாம். |
| 90 | காடு மலையுங் கருதித்தவஞ் செய்தால்<br>கூடு முணர்வின் பயன் . |
| | காடு - உடலில் உள்ள அஞ்ஞான தத்துவங்கள்<br>மலை - பிரணவ மேரு<br>பிரணவத்தை அறியவும், அதை மறைக்கும் அஞ்ஞான தத்துவங்களைப் போக்கவும், ஞான வினையை எண்ணிச் செய்தாலே அறிவினால் உண்டாகும் பயன் வெளிப்படும்.<br>திருமந்திரம் :<br>"விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்<br>விளைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்<br>விளைவறி வார்பண்டை மெய்யறஞ் செய்வார்<br>விளைவறி வார்விண்ணின் மண்ணின்மிக் காரே."<br>விளைவு = உடலெடுத்ததின் பயன்.<br>உடல் எடுத்ததின் பயன் உடலினுள்ளே உமையொருபாகனைக் கண்டு சிவப்பேறு அடைதல். இவ்வுண்மையை அறிந்தவர் நன்னெறியாம் சிவநெறி ஒழுகுபவர். அதுபோல் மெய்யுரையாம் குருமொழி கொள்வர், உடலின் பயன் உணர்ந்தவர். மெய்யறமாம் சிவபுண்ணியஞ் செய்வாரும் உண்மை உணர்ந்தோரே. இவர்கள் விண்ணிலும் மண்ணிலும் அனைவரினும் மிக்கோராய் வாழ்வர்.<br><br>"பிறப்பறியார் பலபிச்சை செய் மாந்தர்<br>சிறப்பொடு வேண்டிய செல்வமும் பெறுவர்<br>மறுப்பில ராகிய மாதவஞ் செய்வார்<br>பிறப்பினை நீக்கும் பெருமை பெற்றோரே." |

பிச்சை = தவ உணவு. பிச்சைசெய் மாந்தர் = தவசிகள்.
மறப்பிலராகி = இரவு பகலாகிய நினைப்பு மறப்பு இல்லாதவராகி.
உயிருக்குயிராகிய இறைவன் தந்த உடலினில் உள்ள உயிர் பிழைக்க உழைக்காது பிச்சை எடுத்து உண்ணும் பலர், பிறப்பு இறப்புக்களால் ஏற்படும் பெரும் துன்பத்தினை அறிய மாட்டார். சிவன் திருவடிகளை மறவாமையே பெருந்தவம். அப்பெரும் தவம் செய்தோர் சிறப்பாகிய வீடுபேறு பெறுவதுடன் வேண்டிய இம்மை மறுமைச் செல்வங்களையும் அடைவர். அவர்களே பிறப்பினை அறுக்கும் சிவபுண்ணியப் பெருமை பெற்றவர்களாம்.

"ஒடுங்கு நிலைபெற்ற உத்தமருள்ளம்
னடுங்குவ தில்லை நமனு மங்கில்லை
இடும்பையு மில்லை யிராப்பக லில்லை
படும்பய னில்லை பற்றுவிட் டோர்க்கே"

ஒடுங்குநிலை = புலன்வழிச் செல்லாமை.
புலன்களை நிலைபெறவேண்டிய சிவன் திருவடிகளில் ஒடுக்குவார் நன்மையே புரிவதால் தலை சிறந்தவராய் வாழ்வார். அவர்களின் உள்ளத்தில் எப்பொழுதும் நடுக்கம் வருவதில்லை. சிவ வாழ்க்கை வாழ்வதால் பிறப்பு இறப்புத் துன்பமில்லை; நமனுமில்லை. பல்வேறு உலகியல் துன்பங்களும் இல்லை. சிவனின் நினைப்பு மறப்பு ஆகிய இரவு பகலில்லை. அடைவதற்குரிய வழிப்பயன்களுமில்லை. இவர்கள்தான் பற்றுக்களை விட்டவர்கள்.

"சாத்திர மோதுஞ் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்
பார்த்தவிப் பார்வை பசுமரத் தாணிபோ
லார்த்த பிறவி யகல விட்டோடுமே."

சதுர் = பெருமை. மாத்திரைப்போது = இமைகொட்டும் நேரம்.
மறித்து = வெளிமுகமாய் இருக்கும் அறிவைத் தடுத்து.
ஆர்த்த = கட்டப்பட்ட.
உள்மெய் நாட்டமின்றிப் பொருளீட்டவேண்டி நூல்களைப் படித்துப் பிதற்றித் திரியும் பொய்ப் பெருமைகளை விட்டுவிட்டு நீங்கள் ஒருமாத்திரை (நொடி)ப் பொழுதாகிலும் உயிர் உணர்வு வெளிப்படாது அகமுகப்பட்டுச் சிவனை நோக்குங்கள். அங்ஙனம் நோக்க, உணர்வு பசுமரத்தாணி போல உயிரில் ஒன்றும். அதனால் தொன்றுதொட்டுப் பிணித்துவரும் பிறவி அகன்றுவிடும்.

# ஞானக் குறள்

## 1 வீட்டுநெறிப்பால்

### 10 பத்தியுடைமை ( 91 – 100 )

**91** பத்தியா லுள்ளே பரிந்தரனைத் தானோக்கில்
முத்திக்கு மூலமது .

பத்தி - ஒன்றிலே ஊன்றிய மனம்;

முத்தி - மவுன வித்தை

யோக வழி நிற்போன் நிலையான மனத்தொடு அசைவற்ற நிலையில் தன்னுள்ளே விரும்பி இறைஞ்சி சிவத்தைக் கூர்ந்து நோக்க மவுன வித்தை கைவரப் பெறும்.

**92** பாடியு மாடியும் பல்காலும் நேசித்துத்
தேடுஞ் சிவ சிந்தையால் .

பாடியும் - பத்துவித நாதங்களை எழுப்பிச் சுரங்களோடு மனதை இலயிக்கச் செய்தல் ;

ஆடியும் - அஞ்சலி எனும் சாலன தந்திரத்தைச் செய்தும்;
பல்காலும் - எப்பொழுதும்
நாதத்தின் மூலமாகவும் சாலன தந்திரத்தாலும் மனதைச் சிவத்தொடு ஒன்றித்தால் சிவம் வெளிப்படும். மனம் ஒன்றும் பயிற்சிகள் பலவாம். அதில் தலையாயது, இசையால் இறையைக் கட்டுவது. பதுமாசனத்திலிருந்துகொண்டு, சாம்பவி முத்திரையால் அசைவற்ற சித்தத்தோடு வலது காதில், சுழுமுனை நாடியிலுள்ள நாதத்தைக் கேட்கவேண்டும். நாதமானது சிவத்திடம் கொண்டு சேர்க்கும். “வேழமுகத்து” என்னும் சிறுநூலில் “சத்தத்தினுள்ளே சதாசிவங் காட்டி” என்று கூறியதை நோக்க விளங்கும்.

மேற்கூறிய “சாம்பவி முத்திரையை” ஒரு குரு அருளவேண்டும். அவரின் மேற்பார்வையிலேயே இச்சாதனையைச் செய்ய வேண்டும். தானே செய்ய அதனால் வரும் மோசமான பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும்.

#### திரிபுராசார சமுச்சியம் :

நாதம் முதலில் மதுவுண்ட வண்டுக் கூட்டங்களால் உண்டாகுஞ் சத்தத்திற்குச் சமமான ஒலியை உண்டாக்குவதாயும், அதன்பின் மூங்கில்கள் ஒன்றோடொன்று

இழையும்போது உண்டாகும் சத்தத்தைப் போலவும், கண்டா நாதத்தின் எதிரொலியாயும், கடல் அலைகளின் பேறிரைச்சலைப் போலவும், இடியின் சத்தத்தைப் போலவும், பிரம நாடியில் உள்ள மேல் துளையில் இருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த மறைபொருளை அறியாதவர்கள், சங்கில் வாயினால் ஊதி, அதில் உண்டாகும் ஒலியில் மனதை ஒன்றச் செய்வர். இதையே "பாடியும்" என்றார். "ஆடியும்" என்பதை குரு முகாந்திரமே தெரிந்துகொள்ளல் வேண்டும்.

ஆடியும் என்பது அஞ்சலி (அம்+சலி = அழகிய அசைவு)

93 **அன்பா லழுது மலறியு மாள்வானை**

**யென்புருகி யுள்ளே நினை .**

ஆள்வானை - ஆட்கொள்ளுஞ் சிவத்தை;

நினை - சிந்தனை செய்

அன்பினாலழுதும், பதைபதைத்து அலறியும், எலும்புருக உடலுக்குள்ளே சிந்தனை செய்ய ஆள்வானை அடையலாம்.

அழுவது இரு வகை. உலக ஆசையைக்கொண்டு அழுவதொன்று. ஆன்மவினைக்கு அன்பினால் அழுவது மற்றொன்று.

*அன்பினால் அழுவதை :*

*தாயுமானவர் :*

"அன்பினாலுருகி விழிநீர் ஆறாகவாராத ஆவேச ஆசைக் கடற்குண் மூழ்கி" என்றும்,

*மாணிக்கவாசகப் பெருமான் :*

"அழலது கண்ட மெழுகதுபோலவும் தொழுதுள்ளமுருகி யழுதுடல்கம்பித் தாடியுமலறியும் பாடியும்பரவியும்" என்றும்,

"மெய்தானரும்பி விதிவிதிர்த்துன் விரையார்கழற்கென் கைதன்றலைவைத்துக் கண்ணீர்ததும்பியுள்ளம்" என்றும், கூறினர்.

**திருமூலர் :**

“மலமென் றுடம்பை மதியாத வூமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர்
நலமென் றிதனையே நாடி யிருக்கிற்
பலமுள்ள காயத்திற் பற்றுமிவ் வண்டத்தே.”

வேறு = சிறப்பு.
தலம் ஒன்று வேறு = வெவ்வேறு அண்டங்களில் பல்வகைப்பட்ட உடல்களை.

மானுட உடல் பிணிப்புறுத்து மலமாகும். இதை மதிப்பிற்குரிய பொருளென பலர் மதிப்பர். மலம் அருவருத்து ஒதுக்கவேண்டிய ஒன்று. ஆக, உடலையும் மலமென மதியாதோர் ஊமராவர். ஊமர், வாய்பேசும் வாய்ப்பு இல்லாதோராகையால், மக்களாய்ப் பிறந்தும் மாக்களெனத் திரிகின்றனர். உடலை இறை தங்கும் சிறப்புமிக்க தலமென நினைந்து நலமென நாடி இருப்போருக்கு, பல்வேறு அண்டங்களில் அவரவர் வினைக்கீடாகிய பயனை நுகர்வதற்குத் தக்க உடலைப் பெறுவர்.

94 ***பூசனை செய்து புகழ்ந்து மனங்கூர்ந்து
நேசத்தா லீசனைத் தேடு .***

முக்கலையொன்றித்தலாம் பூசையை செய்து, ஆண்டவனின் அளவற்ற கருணையைப் புகழ்ந்து கூர்மையான பார்வையை மனத்துடன் பொருத்திச் சிவத்தைத் தேடு.

95 ***கண்ணா லுறப்பார்த்துக் காதலாற் றானோக்கில்
உண்ணுமே யீச னொளி .***

ஈசனின் ஒளியை, யோகப் பயிற்சியாளன் (சாதகன்) தன் கண்களால் அன்புற நோக்கில் சிவத்தை மறைக்கும் சைவ சமய மும்முடிச்சுக்களாம் முப்பொருள்களை (கிரந்தித்திரயங்களை) உண்டுவிடும்.

96 ***நல்லானைப் பூசித்து நாதனென வுருகில்
நில்லாதோ வீச னிலை .***

சிவகலை நாதகலையோடு சேர்ந்து, ஒளியையும் கலையையும் வெளிப்படுத்தி நின்றால் ஈசனிருக்குமிடம் நிலைத்துப் புலப்படும்.

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 10 | **பத்தியுடைமை ( 91 – 100 )** |
| 97 | அடியார்க் கடியராயன் புருகித் தம்முள்<br>படியொன்றிப் பார்த்துக் கொளல் . |

திருவடிகளைக்கொண்டு, அகத்தவம் செய்பவன், முக்கலையை ஒன்றித்துப் பின் ஆதாரப்படிகளின் மீதேறியே உடலினுள் இருக்கும் சிவத்தைக் காணல் வேண்டும்.

## திருமந்திரம் :

"ஆறந்த முங்கூடி யாகு முடம்பினிற்
கூறிய வாதார மற்றுங் குறிகொண்மி
னாறிய வக்கரம் ஐம்பதின் மேலே
யூறிய வாதாரத் தோரெழுத் தாமே"

ஆறந்தம் = கதி அடைவிக்கும் வழி = அத்துவாக்கள் ஆறு.
ஆறிய = அமைந்துள்ள. ஊறிய = அமுதம் ஊறுதற்குரிய.
ஓர் எழுத்து = பிரணவமாம் ஓங்காரம்.

சொல்லும் பொருளுமாகிய வழிகள் ஆறு. அவை முறையே எழுத்து மொழி மறை எனவும், உலகு கலன் (தத்துவம்) கலை எனவும் கூறப்படும். இவற்றால்தான் உடல் இயங்குகிறது. இதில் அமைந்துள்ள ஆறு நிலைக் களன்களிலும் வழிபடும் முறையறிந்து குறிகொண்டு(அசைவின்றி) வழிபடுங்கள். ஆங்கே அமைந்துள்ள அக்கரங்கள் ஐம்பதின்மேலும், அதன் மேல் அமைந்துள்ள மூலாதாரத்து எழுத்தாம் ஓமொழி (பிரணவம்) மீதிருந்தும் அமுது ஊறும்.

"நாலுமிரு மூன்று மீரைந்து மீராறுங்
கோலிமே நின்ற குறிகள் பதினாறு
மூலங்கண் டாங்கே முடிந்த விரண்டுங்
காலங்கண் டானடி காணலு மாமே."

நாலும் = நான்கு இதழ்கள் உள்ள மூலாதாரம்.
இருமூன்றும் = ஆறு இதழ்கள் உள்ள சுவாதிட்டானம்.
ஈரைந்தும் = பத்து இதழ்கள் உள்ள மணிபூரகம்.
ஈராறும் = பன்னிரண்டு இதழ்கள் உள்ள அனாகதம்.
பதினாறும் = பதினாறு இதழ்கள் உள்ள விசுத்தி.

இரண்டும் = இரு இதழ்கள் உள்ள ஆஞ்ஞை.
குறிகள் = அக்கரங்கள்.
காலங் கண்டான் = கால தத்துவத்தையே உண்டாக்கியவன்.

## அகநிலைகளாம் ஆறாதாரங்கள் :

மூலம் = நான்கு இதழ்கள் = மூலாதாரம்
கொப்பூழ் = ஆறு இதழ்கள் = சுவாதிட்டானம்
மேல்வயிறு = பத்து இதழ்கள் = மணிபூரகம்
நெஞ்சம் = பன்னிரண்டு இதழ்கள் = அனாகதம்
மிடறு = பதினாறு இதழ்கள் = விசுத்தி
புருவநடு = இரு இதழ்கள் = ஆஞ்ஞை.

ஆறாதாரங்களுக்குரிய அக்கரங்கள் ஆராய்ந்து அமைக்கப்படும். இந்நிலைக் களங்களில் காலத்தைத் தோற்றுவித்துத் தொழில்படுத்தும் சிவனை நினைந்து வழிபட சிவத்திருவடி காணலாம்.

## ஞானம் எட்டி : திருவள்ளுவர் :

காலைவட்ட மாலைவட்டமாகி நின்ற கதிர்மனையிற் கருதி முனையாடுஞ்சோதி
நீலவட்டங்கொண்டெழுந்து கலையெண்ணான்கும்
நின்றிலங்குமாக்கினையிலிதழிரண்டு ஞாலமதிலாதியந்தரூபமான
நற்கமலமாயிரத்தெட்டிதழின் மேலும் ஆலவிடமுண்டசதாசிவனைப் போற்றி
யம்பிகையின் கமலபாதமர்ச்சித்தேனே.

வட்டமாய் ஒளிவீசும் கதிரவனின் இருப்பிடத்திலே மந்திரத்தின் (சுருதியின்) முனையில் நீலவட்டமாய் நின்றாடுஞ் சோதி, 64 கலைகளும் நிலைபெற்று விளங்கும் ஆக்கினையாம் இரண்டிதழிலும், உலகில் முதலும் முடிவுமான ஆயிரத்தெட்டிதழின் மீதும் வீற்றிருக்கும் ஆலகால விடமருந்திய சதாசிவனைப் போற்றி வணங்கி அம்பிகையின் தாமரையொத்த திருவடிகளை அருச்சித்தேனே.

98 **ஈச னெனக்கருதி யெல்லா வுயிர்களையும்**
**நேசத்தால் நீ நினைந்துகொள் .**

எல்லா உயிரினங்களையும் சிவகலை நிரம்பிய சீவர்கள் என்று அன்போடு நினைத்துக் கருணை புரியவேண்டும்.

# ஞானக் குறள்

| | |
|---|---|
| 1 | **வீட்டுநெறிப்பால்** |
| 10 | **பத்தியுடைமை ( 91 – 100 )** |
| 99 | *மெய்ம்மயிர் கூரவிருப்புற்று வேர்த்தெழுந்து*<br>*பொய்ம்மையி லீசனைப் போற்று .* |
| | அகத்தவத்தால் மயிர்க்கூச்செறிய, வியர்த்து, அழுந்தி உணர்ந்தறிந்து பொய்மையிலாத ஈசனை வணங்கு. |
| 100 | *செறிந்தறிந்து நாடிச் செவ்விதா யுள்ளே*<br>*அறிந்தரனை யாய்ந்து கொளல் .* |
| | திருவடிகளை (மனக் குகையின் கண்களை) ஒன்றோடு ஒன்று சேர்த்து, அதனால் செம்பொருளையறிந்து, அதையே இலக்காக வைத்துக்கொண்டு, உடலுக்குள்ளே உறைந்திருக்கும் அரனை மறைத்திருக்கும் மலங்களை நீக்கி உணர்ந்தறிவாய்.<br><br>எல்லாம் வல்ல இறையருளால், எனக்குத் தெரிந்தவரை, முடிந்தவரை எல்லோரும் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் மூலத்தையும், பொருளையும் தந்திருக்கிறேன். தயவுசெய்து, குருமுகாந்திரமில்லாது நண்பர்கள் யாரும் முயற்சிக்க வேண்டாம். இந்த ஒரு காரணத்திற்காகவே, முன்னோர்கள், இதை **பிரும்ம இரகசியம்** என்று கூறிவந்தனர். |

## வீட்டு நெறிப்பால் முற்றிற்று

## திருவருட்பால்